The

Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறு ஆடுகளும் நமக்குண்டு.
அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ ஒரே
ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11-16.)

புத்தகம் 16. ஜூன் 1918. இலக்கம் 6.

LITURGICAL AND HOMILETIC NOTES.

தேவ சடங்கையும் தேவ வாக்கியத்தையும் பற்றிய குறிப்புகள்.

நமதாண்டவர் பரலோகத்துக் கெழுந்தருளின 10-ம் நாள் தம்முடைய அப்போஸ்தலர்களுக்குத் திடனுக இஸ்பீரீத்துசாந்துவான சர்வேசுரனை யனுப்பிவைத்தார். அவர் பரலோகத்துக்கெழுந்தருளின நாள் வியாழக்கிழமையாதலால், அதன் 10-ம் நாள் ஞாயிற்றுக் கிழமையாமே. இஸ்பீரீத்துசாந்துவையும் அவருடைய வரப்பிரசாதங்களையும் பெற பாக்கியம் பெற்ற அப்போஸ்தலர்கள் அந்த ஞாயிற்றுக்கிழமையை வருஷா வருஷமும் ஒரு திருநாளாகவும் பெருநாளாகவும் அநுசரித்துவந்தார்கள். இத்திருநாள் திருச்சபையில் இஸ்பீரீத்துசாந்துவின் நாள்" என்றும் "பெந்தேகோஸ்த்" என்றும் பெயர்பெற்று வழங்குகிறது. பெந்தேகோஸ்த் என்பது கிரீக் பாஷையின் ஓர் பதம். அப்பதம் "ஐம்பதாவது" என்று பொருள்படும். கர்த்தர் கல்லறையை விட்டு உயிர்த்த 50-ம் நாளில் இஸ்பீரீத்துசாந்துவான சர்வேசுரன் அப்போஸ்தலர்கள்மேல் இறங்கிவந்தபடியால் இத்திருநாள் பெந்தேகோஸ்த் என்று பெயர்பெறலாயிற்று.

*
* *

பழய ஏற்பாட்டில் யூத ஜனங்களும் பெந்தேகோஸ்த் திருநாளைக் கொண்டாடிவந்தார்கள். இத்திருநாளை அவர்கள் "வாரங்களின் திருநாள்" என்றுஞ் சொல்வதுண்டு. ஏனெனில் இதை அவர்கள் பாஸ்கா பண்டிகையிலிருந்து ஏழு வாரங்கள் அல்லது ஐம்பது நாட்கள் வரையிலுங் கொண்டாடுவார்கள். தங்களுக்கு நல்ல வெள்ளாண்மையையும் விளைச்சலையுந் தந்தருளின சர்வேசுரனுக்குத் தங்களுடைய நன்றியறிதலைக் காட்டுவதற்காக இத்திருநாளைக் கொண்டாடிவந்தார்கள் வழக்கமாய் யூதேயா நாட்டில் அறுப்புக்காலம் பாஸ்கா பண்டிகையின் மறு நாள் தொடங்கி, அதன் 50-ம் நாளில் முடிவுபெறும். இதற்குள்ளாக அவரவர்கள் அறுத்த தானிய தவசங்களைச் சேர்த்துத் தங்கள் தங்கள் களஞ்சியங்களில் பத்திரப்படுத்தி வைத்துவிட்டு, 50-ம் நாளாகிய பெந்தகோஸ்த்தன்று வெகு ஆரவாரச் சிறப்பாய் இரண்டு அப்பங்களையும் விளைச்

சலின் முதற் பலன்களையும் சர்வேசுரனுக்குக் காணிக்கையாகச் சமர்ப்பிப்பார்கள். ஆனால் காலக்கிரமத்தில் இத்திருநாளை இக்கருத்துக்காக கொண்டாடாமல், தங்களுக்குச் சர்வேசுரன் மோயீசன் மூலமாய் வேதகற்பனைகளைத் தந்தருளினதை ஞாபகப்படுத்திக்கொள்வதற்காக இதைக் கொண்டாடிவந்தார்கள். ஆகையால், யூத ஜனங்கள் பெந்தகோஸ்த் பண்டிகையை வேதகற்பனைகளின் பண்டிகையென்று மழைத்துவந்தார்கள்.

* * *

தங்களுடைய விளைச்சலின் முதற் பலனைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கவோ, அல்லது தங்களுக்கு வேதகற்பனைகள் கொடுக்கப்பட்டதை ஞாபகப்படுத்திக் கொள்ளவோ யூதஜனங்கள் பெந்தேகோஸ்த் பண்டிகையைக் கொண்டாடிவந்தார்களென்றாலும், அவர்களுடைய இப்பண்டிகையானது கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களான நாம் கொண்டாடும் பெந்தேகோஸ்த் அல்லது இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளுக்குக் குறிப்பும் அடையாளமுமாயிருந்ததேயன்றி வேறல்ல. அதேதெனனில், பெந்தேகோஸ்த் திருநாளன்று நமதாண்டவர் அப்போஸ்தலர்களுக்குத் திடனை இஸ்பிரீத்துசாந்துவை யனுப்ப, அவர்களும் அவரிடம் பெற்றுக்கொண்ட வரப்பிரசாதங்களி னுதவியால் அன்றையத்தினமே மூவாயிரம் பேரை மனந் திருப்பி அவர்களெல்லோரையும் முதற் பலனாகத் திருச்சபையிற் சேர்த்தார்கள். இப்படியாக திருச்சபையினுடைய இந்த ஞான அறுப்புக்கும் முதற் பலனுக்கும் யூத ஜனங்களுடைய பெந்தேகோஸ்த் பண்டிகை சரியான அறிகுறியா யிருந்தது. அல்லாமலும் பெந்தேகோஸ்த் திருநாளானது வேதகற்பனைகளின் மெய்யான திருநாளென்றுஞ் சொல்ல ஆட்சேபனையில்லை. அதேதெனனில், புதிய ஏற்பாடானது அன்றையத்தினந்தான் பிரசித்தப்படுத்தப்பட்டது. பூர்வம் யூதஜனங்கள் பாரவோனின் அடிமைத்தனத்தினின்று மீட்கப்பட்ட பிறகு அவர்கள் பாஸ்கா பண்டிகைகொண்டாடின 50-ம் நாளில் வேதகற்பனைகள் வரையப்பட்ட கற்பலகை அவர்களுக்கு எப்படிக்கொடுக்கப்பட்டதோ, அப்படியே நமதாண்டவரான சேசுநாதசுவாமியும் கல்லறையை விட்டு உயிர்த்து, நம்மைப் பசாசின் அடிமைத்தனத்தினின்று இரட்சித்த 50-ம் நாளாகிய இன்று, இஸ்பிரீத்துசாந்து வானவர் அருளும் அன்பும் நிறைந்த புதிய ஏற்பாட்டை அல்லது நூதன வேதத்தை இரட்சண்ய பேறு பலன்களுக்குப் பாத்திரவான்களானவர்களின் இருதயங்களில் வரையலானார். ஆம், இன்றையத்தினத்தில்தான் பழய ஏற்பாடு ஒழிந்து, புதிய ஏற்பாடு உண்டாயிற்று, அல்லது திருச்சபை ஏற்பட்டது. ஏற்கெனவே திருச்சபை நமதாண்டவரால்—அவர் மோட்சத்துக் கெழுந்தருள்வதற்கு முந்தியே—ஸ்தாபிக்கப்பட்டதென்றாலும், பிறந்த குழந்தையானது தன்னைப் பிரசவித்த தாய் வெளியேறும் வரையிலும் அவளோடு அந்தரங்கத்தி லிருப்பதுபோலத் திருச்சபையும் ஆரம்பத்தில் அந்தரங்கத்திலிருந்து இன்றுதான் வெளியானது. ஆகையால் பெந்தேகோஸ்த் திருநாளே திருச்சபையின் ஜனன நாளென்னலாம். நல்ல பிள்ளைகள் தங்கள் பெற்றோர் பிறந்த நாளைக் கொண்டாடி அவர்களுக்குச் சோபனங் கூறுவதுபோல, நாமும் திருச்சபையின் ஜனன நாளான இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளன்று குதூகலங்கொண்டு, திருச்சபையின் க்ஷேமத்துக்காகவும் விருத்திக்காகவும் வேண்டிக்கொள்வோமாக

* * *

இஸ்பிரீத்துசாந்து இறங்கிவந்தபோது "அவர்களெல்லோரும் அந்த இடத்திலேதானே ஒருமித்திருந்தார்கள்" (அப் நடபடி II, 1). அந்த இடம் யாதெனில், நமது கர்த்தர் மோட்சத்துக் காரோகணமானபிறகு அப்போஸ்தலர்களும் மற்ற விசுவாசிகளும் ஒருங்கே சேர்ந்து ஜெருசலேமில் தங்கியிருந்த இடமாம். இதுதான் நமது கர்த்தர் பாடுபடப் போவதற்கு முந்தி தம்முடைய அப்போஸ்தலர்களுடன் இராப்போசனம் செய்த, அல்லது திவ்யநற்கருணை யுண்டாக்கின அசனசாலை. இந்த அசனசாலை உலகத்தின்கண் மகா பரிசுத்தமும் பூச்சியமுமான இடமாயிருந்தபடியால், இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரனும் தம்முடைய வரப்பிரசாதங்களினால் அங்கு இருந்தவர்களை நிரப்பினார். அங்கு கூடியிருந்தவர்களெல்லோரும் 120-பேரே ஆவர். அர்ச். அகுஸ்தீன்

சொல்லியிருக்கிறபடி திருச்சபை முழுதும் ஜெருசலேம் பட்டணத்தில் அசனசாலையிலிருந்து இஸ்பிரீத்துசாந்துவைப் பெற்றுக்கொண்டது. இதனால் நாம் அறிந்துகொள்ள்வேண்டியது யாதெனில், சத்திய கத்தோலிக்குத் திருச்சபையிற் சேர்ந்திருக்கிறவர்களேயன்றி, வேறுயாரும் இஸ்பிரீத்துசாந்துவையும் அவருடைய வரப்பிரசாதங்களையும் பெற்றுக்கொள்ளார். ஆனபடியாலல்லோ நமது கர்த்தரும் திருச்சபையின் சொற்படி கேளாதவன் உனக்கு அஞ்ஞானியைப்போலாகக்கடவான் என்று திருவுளம்பற்றியிருக்கிறார்?

ENTHRONEMENT OF THE S. H. OF JESUS IN THE HOME.

இல்லங்களில் சேசுவின் திரு இருதய அரசாட்சி.

"அவருக்கு அநவரதகாலமும், பிரதாபமும் இராச்சியபாரமும் இருப்பதாக! ஆமென்"
(அர்ச். இரா. 1-திரு. V—11.)

"உம்முடைய இராச்சியம் வருக" என்று அன்றாடமும் பல தடவைகளில் உச்சாரணம் பண்ணி வருகிறோம். கிறீஸ்துநாதரின் கிருபை இம்மையில் நம்மிருதயங்களில் குடியிருக்க வேண்டுமென்றும், உலகத்தின்கண் சத்தியமறை பரவ வேண்டுமென்றும், மறுமையில் நம்மைத் தேவசிம்மாசனத்திற்குமுன் கொண்டுபோக வேண்டுமென்றும் மன்றாடுகிறோம். இதுதான் நாமநுதினம் ஜெபிக்கும் மந்திரத்தின் பொருள். இதன்பால் நமக்கு எவ்வளவு ஊக்கமும் வைராக்கியமு முளவோ, அவ்வளவுக்கும் சேசுநாதருடைய இராச்சியம் பரம்புதற்கு வழிகளைத்தேடி யுழைக்க மனமுமுற்சாகமு முண்டாகும். அவ்வாறு செய்யக்கூடிய வழிகளில் ஒன்று இல்லத்தில் சேசுவின் திரு இருதய அரசாட்சியை ஸ்தாபித்தலாம்.

இத்தாலியா தேசத்திற்கோர் திலகம்போலவும், கிறீஸ்வர்களுக்குச் சிறந்ததோர் க்ஷேத்திரம்போலவும் விளங்குவது ரோமாபுரி. அவ்விடத்தில். சங். மாத்தியூ க்ராலி போவே எனுங் குருவானவரொருவரிருந்தார். இவர் சேசுமரியின் திரு இருதயச் சபையைச் சேர்ந்தவர். 1905௵ கடும் வியாதியால் படுக்கையிலிருந்தார். வைத்தியர்கள் கைவிட்டு விட்டனர். உயிர் நூலினிலையில் நிற்கின்றது. சேசுவின் திரு இருதயத்தின் மீது முழு நம்பிக்கையை வைத்தனர். பிராஞ்சு தேசத்தில் பாரெ லெ மோனியல் என்பது ஓரிடம். அங்குதான் சேசுவின் திரு இருதயம் முத்திப்பேறுபெற்ற மர்க்கரீத் மரி யெனுங் கன்னிகைக்குத் தரிசனங்கொடுத்தது. அவ்விடத்திற்கே போக ஆவல்கொண்டார் ஷை சுவாமியார். அவர் விருப்பத்தின்படி அங்கு கொண்டுபோகப்பட்டார். போனதும் கோவிலில் திவ்யநற்கருணையின்முன் சாஷ்டாங்கமாய் விழுந்து, தன்னிருதயத்தையும், தன் ஆசைகளையு மங்கே சமர்ப்பித்தார். கடவுள் அவர்மீது கருணைக்கண்ணோக்கினார். வாடிய செடிகளுக்குத் தண்ணீர் வார்த்தால் அவற்றின் இலைகள் மலர்ந்து வருவது போலும், சுவாசிக்கக் காற்றற்ற அறையில் அடையுண்டு சோர்ந்துபோன மனிதனை ஆகாய விலாசத்தில் அமர்த்தினால் உயிர்க்குக் கிளர்ச்சி வருவதுபோலும், மரணவாய்ப்பட்டுச் சோர்ந்திருந்த போவே சுவாமியாருக்குத் திடீரென சுகம் வரவே நிமிர்ந்து நிற்கவும், பேசவும், நடக்கவும் வல்லவராயினர். சரீரத்தில் பலம் உண்டாயிற்று. ஆத்துமத்திலோ விசேஷ வரப்பிரசாதம் இறங்கினது. சேசுவின் திரு இருதயத்தின்மீது பக்திமிகுந்தது. அவரது அரசாட்சியை உலகெங்கும் நிலைநிறுத்த வேண்டுமெனுமாசை பொங்கினது. இதற் குகந்த வழி சேசுவின் திரு இருதய அரசாட்சியை முதன்முதல் இல்லங்களில் ஸ்தாபிப்பதெனத் தெரிந்துகொண்டார். இவ்வுன்னத அலுவலைத் தன்னிடமிருந்து இருதய ஆண்டவர் கேட்பதாக உறுதியாய் யூகித்துக்கொண்டார். இதற்காக ஊன்றி யுழைக்கும்படியே தனக்குத் தேவசுதன் நற்சுகம் ஈந்தனர் என்பது அவரது முழு நம்பிக்கை. ஆகவே யதற்காக உழைக்க ஆரம்பித்தார். சேசுவின் திரு இருதய அரசாட்சியை புவனத்தின்கண் ஒருங்கே ஸ்தாபிப்பதும் தேசங்களிலும், இராச்சியங்களிலும் அதை நிலைநிறுத்துவதும் அற்பமான அலுவலன்று. அது மிக்க கஷ்டமானது. ஆகையால் முந்தமுந்த ஒவ்வொரு வீட்டிலும் அவ்வரசாட்சியை ஸ்தாபிப்பதே நலம் என உத்தேசித்தார். ஏனெனில் பிரதி வீட்டிலும் அவரது அரசாட்சியை நிலை

நிறுத்தினால் ஊர்களிலும் தேசங்களிலும் அதை ஸ்தாபிக்க இலகுவாகு மென்பது அவர் மன உறுதி.

இது இவருக்கு மாத்திரம் புதிதா யுதித்த எண்ணமல்ல. மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னமே, சேசுவின் திரு இருதயம் முத்திப்பேறு பெற்ற மார்க்கரித்துக்குத் தம்மைப் பிரத்தியக்ஷமாய்க் காட்டியபொழுது, "என திருதயத்தின் மேல் பக்தி வைப்பவர்களது குடும்பத்திற்கு சமாதான மளிப்போம்" என்றும், "என்னிருதயப் படமாகிலுஞ் சுரூபமாகிலும் எந்தெந்த இல்லத்திலிருக்குமோ அந்தந்த இல்லங்களை யாசீர்வதிப்போமென்றுந் திருவாய் மலர்ந்தருளினர் நமதாண்டவர். இதையு மாதாரமாகக் கொண்டு போவே சுவாமியார் உதாரத்துடன் உழைக்க முன்வந்தார். இதற்காக அக்காலந் திருச்சபையை யாண்டுவந்த பத்தாம் பத்திநாதரிடம் அவரது அநுமதியும் ஆசீர்வாதமும் பெறப்போயினர். அம்மகாத்மா அவருக்கு உத்தரவளிப்பதற்குப் பதிலாய், அவ்வுத்தம வேலையை நடத்த அவருக்குக் கட்டளை யளித்து ஆசீர்வார்த்தைகளையு மொழிந்தார். பின்னர் 15-வது ஆசீர்வாதப்பரிடம் இவ்விஷயத்தை விளம்பியபொழுது, அவர் உரைத்ததாவது: "ஒவ்வொரு வீட்டையும் திரு இருதய ஆலயமாக்கிவிடு. ஒவ்வொரு வீட்டிலும் அன்பு நிறைந்த அரசனின் சிம்மாசனத்தை ஸ்தாபிப்பதற்காக ஒவ்வொரு குடும்பத்திற்கும் இது விஷயத்தைப்பற்றிப் போதிப்பாயாக. அன்பினரசருக்காக இவ்வேலையைத் தொடங்குகிறாய். நாம் அவரது ஸ்தானாதிபதி. அது எமது வேலை. அதில் நீ யெமக் குதவிபுரிவதால் நாமுனக்கு நன்றிபாராட்டுகிறோம்" என்பதாம்.

இச்சுகிர்த பக்தி கிருததியத்தால் நடந்துள்ள நன்மைகள் பலவென சங். போவே சுவாமியாரே வரைந்துளர். அவைக ளெல்லாவற்றையு மெடுத்துரைக்க சாத்தியப்படாவிடினும், ஒன்றைமட்டும் இங்கெடுத்துரைப்போம். அமெரிக்காவின் பிரதான கோவில் ஒன்றில் சங். போவே சுவாமியார் பிரசங்கம் செய்தார். அது முடிந்த பின் அவர் கோவிலைவிட்டு வெளியே வருகையில் ஓர் மாது அவரையணுகி கண்ணீர் ததும்ப சொல்லியதாவது: "சுவாமீ! ஓர் குடும்பத்தில் சேசுவின் திரு இருதய பக்தி யனுஷ்டிக்கப்பட்டு வருமாகில் அக்குடும்பத்தில் சமாதானமும், அங்குள்ளோர் நல்வழி திரும்பவும் வழியாயிருக்குமென்று தேவரீர் பிரசங்கித்தீர்களே. அப்படியானால் என் கணவன் மனந்திரும்புவாரோ?"

"ஏன், உன் கணவனுக்கென்ன?"

"சுவாமீ, அவர் தெய்வபயமற்றவர்; அவர் ஓர் நாஸ்திகர்.

"கடவுள் அவன்பால் கருணைவைப்பார். ஆனால் நீ முதலாவது, தினந்தோறும் திவ்ய நன்மையருந்தவேண்டும். இரண்டாவது, உனது குடும்பத்தைச் சேசுவின் திரு இருதயத்திற்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். அதற்கத்தாக்ஷியாக அவரது படமொன்றை உன் இல்லத்தில் ஸ்தாபிக்க வேண்டும். மூன்றாவது, மற்றவர்களிடத்து இப்பக்தியைப் பரவச்செய்யவேண்டும்" எனக் கூறினர் குருவானவர். இதைக் கேட்ட அவள், திரு இருதயப்பட மொன்றை யவரது கரங்களில் கொடுக்க, அவரதை மந்திரித்து, "சேசுவே! உமது இரக்கத்தால் இந்த ஆத்துமத்தை யிரட்சியும்" என்றெழுதி தனது பெயரையும் அதில் வரைந்துகொடுத்தார். படம் வீட்டிற்குக்கொண்டு போகப்பட்டது. பிரதான ஸ்தானத்தில் அதை வைக்கச் சம்மதப்படவில்லை கணவன். ஆகையால் படுக்கையறையிலே அது வைக்கப்பட்டது.

இரண்டு வருஷங்களாயின. கணவன் கடின வியாதியானான். சகிக்கவொண்ணா கஸ்திப்படுகிறான், அலறுகிறான், கதறுகிறான், கடவுளை நிந்திக்கிறான்; துர்மொழிகள் பல மொழிகிறான். அன்பார்ந்த பத்தினியின் அமிர்தவார்த்தைகளைக் கேளான். கடவுளை நினையான். வேதக்கடமைகளைப் பழிக்கிறான். குருவானவரை வெறுக்கிறான். அவர் தன்னண்டை வரக்கூடாதெனக் காட்டப் பக்கத்தில் கைத்துப்பாக்கி யொன்றை வைத்திருக்கிறான். மனைவி அழுதாள்—கவலையால் அங்கலாய்த்தாள்—கேட்டாள் பத்தாவை—கெஞ்சினாள். வேண்டினாள்—கடவுளை மன்றாடினாள். ஓடினாள்—குருவை நாடினாள்.

"சுவாமீ! அவர் ஆபத்திலிருக்கிறார். ஒன்றுமாகவில்லையே!"

"சரி. நாம் சொன்னதையெல்லாஞ் செய்தனையோ?"

"ஆம் சுவாமீ!"

"அப்படியானால் நீ யஞ்சவேண்டாம். எல்லாம் நன்கு முடியும். இன்று மாலை நமது கோவிலில் திவ்யநற்கருணை ஸ்தாபகம். அப்போது அவனுக்காக வேண்டிக்கொள்வோம். நாளைக்கு அவனைப் பார்க்க வருவோம். நீ போய்வரலாம். சேசுவின் திரு இருதயத்தின் பேரில் நம்பிக்கை வை" எனத் தேற்றிப் பகர்ந்தார் தேசிகர்.

மறுநாள் அவனது இல்லம்போகப் புறப்பட்டார். அவனது சுபாவம் இவருக்குத் தெரியும். ஆபத்து நேரிடக்கூடுமெனவு மறிவார். ஆயினும், சேசுவின் திரு இருதயத்தை நம்பிப் போயினர். வியாதியஸ்தனி னறையிற் புகுந்தனர். "தம்பீ, நான் ஓர் குருவானவர். சேசுவின் திரு இருதய நேசத்தால் உன்னை யிரட்சிக்கவேண்டுமென்பது என்னுசை" என உரைத்தார். உடனே துப்பாக்கியைக் கையிலெடுத்த வண்ணம் "உன் பெயரென்ன?" எனக் கேட்டான்.

"நீ யதை யறியவேண்டுமென்ப தவசரமில்லை. நேச சேசுவின் திரு இருதயத்தின்பேரால் அவரது தூதனுக இங்குவந்தேன்." "அதிருக்கட்டும், உமது பேரைச் சொல்லும்" என வற்புறுத்திக் கேட்டான். "அப்படியானுல் என் பெயர், அதோ இருக்கின்றது" என்று திரு இருதயப் படத்தைச் சுட்டிக்காட்டினுர். "சுவாமீ! நீர்தானு 'சேசுவே! உம திரக்கத்தால் இந்த ஆத்துமத்தை யிரட்சியும்' என் றெழுதினீர்?"

"ஆம்" என விடையளித்தார் குரு.

உடனே அவனிடத்தில் ஓர்வித மாற்றந் தோன்றிற்று. குரூரரூபம் மாறினது. கோபமடங்கியது. மனஸ்தாபக் குறிகள் தென்பட்டன. "சுவாமீ, பாவசங்கீர்த்தனம் பண்ண ஆசையாயிருக்கிறேன்—எனக் குதவி செய்யும், என் பேரில் இரக்கமாயிரும். இதுதான் எனது முதற் பாவசங்கீர்த்தனம்" என்று விசனத்தோடும் தாழ்ச்சியோடும் மொழிந்தான். அதன்பின் நற்பதவி யடைந்தானெனச் சொல்லவேண்டியதில்லை. இதுவெல்லாஞ் சேசுவின் திரு இருதய அரசாட்சியை ஸ்தாபித்ததின் பலனென விளம்புவது அவசரமன்று.

இந்நற்பழக்கமானது துரிதமாக உலகத்தினெத்திசையிலும் பரவினது. 1915ஞு மே மாதத்தில் சேசுவின் திரு இருதய அரசாட்சியை ஸ்தாபித்த குடும்பங்களின் தொகை 1½ கோடி. பின் ஓர் ஆண்டுக்குள்ளாக 3 கோடியாயின. தற்போது எத்தனை கோடியென இயம்புந் தரமல்ல.

சேசுவின் திரு இருதய அரசாட்சியை இல்லத்தில் ஸ்தாபிப்பது கஷ்டமான காரியமன்று. சுரூபம் அல்லது படமொன்றை வாங்கி, அது குருவானவரால் மந்திரிக்கப்பட்டபின், அதை வீட்டின் பிரதான விடத்தில் குடும்ப சகிதமும் புடைசூழ ஸ்தாபிப்பதேயாம். படத்தில் குடும்பத்திலுள்ளவர்களின் நாமங்களை வரைந்து வைப்பது நன்று. கூடுமானுல் பங்கு ஸ்வாமியார் கையெழுத்தும் பெற்றுக்கொள்வது உத்தமமாகும். படத்தை ஸ்தாபித்தபின் குடும்பத்துத் தலைவர் (குருவானவர் பிரசன்னமாயிருந்தால் அவர்) சேசுவின் திரு இருதயத்திற்குக் குடும்பத்தை யொப்புக்கொடுக்குஞ் செபத்தை செபிக்கவேண்டியது. இந்த நாளை உத்தம நாளாகவும் விசேஷ நாளாகவும் காட்டும் வண்ணம் எல்லோரும் நல்ல பாவசங்கீர்த்தனம்பண்ணி திவ்ய நன்மை யருந்துவது நன்று. பின்னர், அன்று திருநாட்களில் செய்வதுபோல் விசேஷ பதார்த்தங்களுடனும் பந்து மித்திரர்களுடனும் புசிப்பது விசேஷ வழக்கங்களில் ஒன்று. கடைசியாய், வருஷா வருஷம் அந்நாளை விசேஷ நாளாய்ப் பாவித்து வந்தால், அப்பக்தி தளர்ந்துபோகாது வளர்ந்து வருமென்பது திண்ணம்.

இதை வாசிக்கும் பிரிய சகோதரர்காள்! இப்பக்தியை உங்கள் வீடுகளில் முந்த முந்த ஸ்தாபிக்கப் பிரயாசப்படுங்கள். பின்னர் பிறரில்லங்களிலும் ஸ்தாபிக்க முயற்சியெடுக்கப் பின்வாங்காதேயுங்கள். அப்படிச் செய்யின் சேசுவின் திரு இருதய ஆண்டவர் உங்களை இகத்தில் ஆசீர்வதித்துப் பரத்தில் உங்களுக்குச் சம்பாவனை யளிப்பாரென்பது திண்ணம்.

M. S. M.

GNANAMANI, III PART.
ஞானமணி 3-ம் பாகம்.
53-ம் அதிகாரம்.

மணி டாங்க் டாங்க் என்று ஏழ அடிக்கவே, நாடக மேடையின் திரைச்சீலைத் தாழ இறங்கினது.

விஜயரங்க ராஜா இந்தக் கல்விச்சாலையைச் சந்தித்துப் போன இரண்டாம் வருஷம் நவம்பர் மாதத்தில் மேற்படி கல்விச்சாலையின் மானேஜர் ஸ்வாமியார்; இராஜா அவர்களுக்குக் கடிதம் எழுதி மறுமாதமாகிய டிசம்பர்மீ 18உ யன்று தமது கல்விச்சாலைக்கு அவர்கள் விஜயஞ் செய்து

மாணுக்கருக்கு (Prize) வெகுமதி அளித்து அன்று மாணுக்கரால் ஆடப்படும் சிறு நாடகத்தைப் பார்க்கும்படி கேட்டுக்கொண்டார்.

மகாராஜாவும் இதற்கு மகா சந்தோஷத்துடன் ஒப்புக்கொண்டு, தாமதமின்றி அந்தக் கடிதத்துக்குப் பதில் அனுப்பிவைத்தார்.

மறு நாளே அந்த ஸ்கூல் கட்டிடங்களை வேலைக்காரர் பழுது பார்க்கவும், வெள்ளை அடிக்கவும் தொடங்கினுர்கள். அந்தந்தக் கட்டிடத்துக்குப் போகும்படி போடப்பட்டிருந்த ரஸ்தாக்களும் புதிப்பிக்கப்பட்டு பால்போன்ற வெண்மையான மணலால் நிரப்பப்பட்டன.

அந்த ஸ்கூலைச் சேர்ந்த மைதானங்களும், சக்கர வடிவங்களாகவும், நாலு மூலைச் சதுர வடிவங்களாகவும், முக்கோணவடிவங்களாகவும், நக்ஷத்திர வடிவாகவும், பற்பல உருவங்களாகவும், எழுத்துகளாகவும், சிலுவை வடிவாகவும் பிரிக்கப்பட்டு, அழகான பூஞ்செடி, நேர்த்தியான இலை, தழை, சுந்தரமான கொடி முதலியவை வைக்கப்பட்ட சிறிதும் பெரிதுமான ஜாடிகளால் சிங்காரிக்கப்பட்டிருந்தன.

அந்த வருஷம் டிசம்பர்மீ 18வ யன்று அந்த ஸ்கூல் கட்டிடங்களும் மைதானங்களும் வெகு அலங்காரமாய்க் காணப்பட்டன. எப்பக்கத்திலும் மகுட தோரணங்களும் புஷ்ப மாலைகளும் கட்டப்பட்டிருந்தன. பல வருணக் கொடிகளும், காற்றுக்கு கல கல வென ஆடிக்கொண்டிருந்தன. அங்காங்கு வில் வளைவான சிங்காரச் சிறு பந்தல்கள் எழுப்பப்பட்டு, அவற்றில் இராஜாவுக்கு நல்வரவு கூறும் பதங்கள் விசித்திரமான எழுத்துக்களால் சித்திரிக்கப்பட்டிருந்தன.

அன்று சாயந்தரம் அந்த ஸ்கூல் மார்க்கமாய்ச் சென்ற ஜனங்கள் ரஸ்தாக்களில் பரப்பப்பட்டிருக்கும் வெண்மையான மணல் மணிகள் மாலை வெளிச்சத்தால் வஜ்ஜிரங்கள்போல மின்னுவதைப் பார்க்கும்போதும், பலவர்ண ஜாடிகளில் வரிசை வரிசையாய் வைக்கப்பட்டிருக்கும் பூஞ்செடிகளைக் காணும்போதும், விசித்திர விநோதமான மகுட தோரணங்களையும், பூமாலைகளையும், வில் வளைவுகளையும், காற்றுக்குக் கல கல வென்று அசைந்தாடும் ஜாலர்களையும் கண்ணுேக்கும்போதும், கட்டிடங்கள்மேலும், சுவர்கள் மேலும் அமைக்கப்பட்டிருக்கும் நானுவிதமான தீப அலங்காரங்களையும், மரங்களின் கிளைகளிலும், பந்தல்களிலும், தொங்கும் பலவர்ண விளக்குகளையும் சைனு லாம்புகளையும் பார்க்கும் போதும், அங்காங்கு விசித்திரமான தீபத்தால் துலங்கும் பற்பல எழுத்துக்களையும் ரூபங்களையும் நோக்கும்போதும் ஆ! ஆ! எவ்வளவு சுந்தர அலங்காரமாய்க் காணப்பட்டன.

ஆனுல் சபைக்கூடம் முஸ்திப்புச் செய்யப்பட்டிருக்கும் பிரமாண்டமான மண்டபத்துக்குள் செல்லவே, அது சொர்க்கலோகமாகக் காணப்பட்டது அதன் அலங்கார ஜோடினையால். மண்டபம் முழுதும் மின்சார தீபங்களால் கொளுத்தப்பட்டு இரவைப் பகலாகச் செய்யும் ஜெகஜோதியாய்க் காணப்பட்டது. மின்சார பங்காக்களுங் இடைவிடாமல் சுழன்றுகொண்டிருந்தபடியால் அந்த மண்டபத்தில் கால் வைத்த உடனே ஜில் என்று ஆனந்தகரமா யிருந்தது. அந்தச் சிங்கார மண்டபத்தின் சுவர்களில் தொங்கும் பலவர்ணக் கொடிகளையும், பட்டுச்சருகை ஜாலர்களையும், குஞ்சங்களுடன் தொங்கும் பட்டு வஸ்திரங்களையும் பார்க்கையில் எவ்வளவு சிறப்பலங்காரமாய்க் காணப்பட்டது அந்த விஸ்தாரமான சாலை! நாலாபக்கங்களிலும் கட்டித் தொங்கவிட்டிருக்கும் பரிமளம்வீசும் முல்லை, மல்லிகை, லீலி, ரோஜா முதலிய பூமாலைகளின் அலங்காரத்தையும், அங்காங்கு அழகான கண்ணுடி ஜாடிகளில் வைக்கப்பட்டிருக்கும் பல தினுசான புஷ்பக்கொத்துகளைக் கண்ணுேக்கும்போதும், இடைவிடாமல் சுழலும் மின்சார பங்காக்களால் நாலாபக்கங்களிலும் வீசப்படும் அத்தனை பூமலர்களின் நறுமணத்தை நாசியால் உட்கொள்ளும்போதும் எப்படி உரைப்பேன் மனதிலுதிக்கும் சந்தோஷானந்தக் களிப்பை!

அந்தப் பெரும் மண்டபம் 1,200 பேருக்கு அதிகமாய்க் கொள்ளாதபடியால், டிக்கட்டு மூலமாய்க் கனவான்கள் தனவான்களுமான முக்கியமான புருஷாட்கள் மாத்திரம் அன்றுதினம் அழைக்கப்பட்டனர். கலெக்டர், ஜட்ஜ், போலீஸ் சூப்ரன்டெண்ட், உப்பு, பாரெஸ்டு உத்தியோகஸ்தர்கள், ஸ்கூல் இன்ஸ்பெக்டர்கள், டிஸ்டிரிகட் சார்ஜன், பாரிஸ்டர்கள், வக்கீல்கள், பல கல்விசாலைகளின் பண்டிதர்கள் முதலிய கனவான்கள் குறிக்கப்பட்ட நேரத்துக்கு முன்னதாகவே அங்குவந்து சேர்ந்து, தங்கள் தங்களுக்குப் போடப்பட்ட ஆசனங்களில் அமர்ந்து ஒருவரோடொருவர் உல்லாசமாய்ச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். மேற்றிராணியாரும் சிரேஷ்டரும் மற்றக் குருப்பிரசாதிகளும், பிரதர்மார்களும் தங்கள் தங்கள் ஸ்தானங்களில் உட்கார்ந்

தார்கள். எழு மணிக்கு முன்னதாக விஜயரங்க மகாராஜா அவர்கள் அழகிய வஸ்திராபரணங்களைத் தரித்தவராய் மண்டபத்தில் விஜயஞ்செய்யவே, ஸ்கூல் மானேஜரால் எதிர்கொண்டு அழைக்கப்பட்டு மேற்றிராணியாருடைய வலது பக்கத்தில் அக்கிராசனபதியாகச் சிறந்த ஆசனத்தில் அமர்த்தப்பட்டார்.

உடனே அன்று மண்டபத்தில் நடக்க இருக்கும் விருத்தாந்தங்கள் அச்சிடப்பட்ட கிரமப் பிரகடனம் (Programme) அங்கு சபைகூடிய கனவான்களுக்கு அளிக்கப்பட்டது.

PROGRAMME.

1. எழு மணிக்கு மகாராஜாவுக்கும், மற்ற கனவான்களுக்கும் நல்வரவு உபசரிக்கும் கீர்த்தனை பாடப்படும்.

2. மகாராஜா அவர்களால் மாணுக்கர்களுக்கு வெகுமதி அளிக்கப்படும். பிறகு ஸ்கூல் ரிப்போர்ட் வாசிக்கப்படும்.

பழிக்குப் பழி.

3. நாடகத்தின் முதல் பாகம்.
4. பாட்டுக் கச்சேரி.
5. நாடகத்தின் இரண்டாம் பாகம்.
6. பாண்டு வாத்தியம்.
7. நாடகத்தின் மூன்றும் பாகம்.
8. பாட்டுக் கச்சேரி.
9. நாடகத்தின் நான்காம் பாகம்.
10. பாட்டுக் கச்சேரி.
11. நாடகத்தின் ஐந்தாம் பாகம்.
12. பாட்டுக் கச்சேரி.
13. பாண்டு வாத்தியம்.
14. நாடக முடிவு.
15. பாண்டு வாத்தியம்.
16. மங்கள வாழ்த்தல் கீர்த்தனை.

நாடகத்தின் சுருக்கமான வருணனை :— அனேக வருஷங்களுக்குமுன் இத்தாலியா தேசத்தில் உள்ள ஒரு மாகாணத்தை ஆண்டுவந்த அரசனும் அரசியும் மூன்று வருஷத்துக் குழந்தையான தங்கள் குமாரனை விட்டுவிட்டு ஒருவருக்குப்பின் ஒருவராய் மரித்துப்போனார்கள்.

பட்டத்துப் பிரபு சிறுவனாயிருந்தமையால், அவனுக்குப் பிராயம் வருந்தனையும் ஒரு பிரபு அந்த தேசத்தை ஆளும்படி பிரதிநிதியாக நியமிக்கப்பட்டான். இந்தப் பிரபு பேராசை யுள்ளவனாய் அந்தேசத்தை அபகரித்துக்கொண்டு அந்த இராஜபாலகனைக் கொல்லத் தீர்மானித்திருந்தான்.

தன் மந்திராலோசனையிலிருந்த இரு பிரபுக்களுக்குத் தன்னுடைய துஷ்டக்கருத்தை வெளியிட்டு கபடமாய் பாலகனைக் கொன்று அவனுடைய இரு கண்விழிகளையும் தன்னிடம் கொண்டுவரும்படி கற்பித்தான்.

அவ்வாறே அவ்விரு பிரபுக்களும் வெகு தூரத்திலிருந்த காட்டுக்கு வேட்டையாடப்போகிறவர்களைப்போல் அபிநயித்து ஆறு பிராயமுள்ள இராஜபாலகனைத் தங்களுடன் கூட்டிக்கொண்டு போய் இராஜ பிரதிநிதியின் கோரிக்கைப்படி காரியத்தைச் செய்து முடித்தார்கள். பிரதிநிதியும் இரு பிரபுக்கள் கொண்டுவந்த கண்விழிகளைக் கண்டு திருப்தி யடைந்தான்.

ஒரு சிறுவன் அதே காட்டில் அலைந்து திரிந்து இராவேளையில், புயல்காற்றாலும் பெரும் மழையாலும் துன்பப்பட்டு இடி முழக்கத்தால் வெருவாய் பயந்து, அருகாமையிலிருந்த ஒரு பெரும் மரத்தின் பொந்தில் சென்று அவ்விடத்தில் நித்திரை செய்து இரவைக் கழித்தான்.

மறுநாள் காலை பக்கத்து கிராமத்து வேடர் இந்தச் சிறுவனைக்கண்டு அதிசயித்து அவனைக் கூட்டிகொண்டுபோய் தங்கள் ஊரிலிருந்த அநாத பிள்ளைகளின் மடத்தின் அதிகாரிகளின் கையில் ஒப்படைத்தார்கள்.

மேற்படி பிரபுக்கள் தங்கள் தேசத்துக்குத் திரும்பினபின், தாங்கள் கூட்டிக்கொண்டு போன இராஜபாலகனை துஷ்டமிருகம் அடித்துக் கொன்றுவிட்டதென்று பிரஜைகளுக்கு அறிவித்தார்கள். பிரஜைகளும் அதை நம்பினார்கள். அந்த இராஜ பிரதிநிதி அத்தேசத்துக்கு அரசனாக நியமனம் பெற்றான்.

ஒருவனைக் கொலைசெய்து இராஜ சிம்மாசனம் ஏறின இந்த அரசன் நாளாவட்டத்தில் மகா விசனப்படத் தொடங்கினான். காலஞ்செல்லச்செல்ல இவனுக்குப் பயமும் திகிலும் பெருகி மனதில் அற்ப சமாதானமுமின்றி வெகு சங்கடப்பட்டு வந்தான். இராவேளையில் நித்திரை செய்யும் சமயத்தில், தன் கபட தந்திரத்தால் அநியாயமாய்க் கொல்லப்பட்ட பாலகனைப் பார்ப்பதுபோல் கனவுகண்டு, பெரும் சத்தம் போட்டு அலறிப் பதைப்பான். பகலில் முதலாய் அப்பாலகனுடைய ஞாபகம் மனதில் கிளம்பும்போது முகம் மாறி தான் கட்டிக்கொண்ட

பெருங் கொலையைப்பற்றி நினைத்து துக்கித்து அங்கலாய்ப்பான்.

மனச்சாக்ஷியாலும் பயத்தாலும் திகில் கொண்டு உரோமைக்கு திருயாத்திரையாகச் சென்று, அங்கு அந்த வருஷம் புதிதாய் தெரிந்து கொள்ளப்பட்ட அர்ச். பாப்பானவருடைய திரு தரிசனைகொண்டு, தான் கட்டிக்கொண்ட கொலைப்பாதகத்தை அவருக்கு அறிவித்து அவர் விதிக்கும் தண்டனைக்கு உட்படுங் கருத்துடன் திரு நகருக்குப் புறப்பட்டான்.

அர்ச். பாப்பானவருடைய தரிசனை கொண்டு தன் பாதகத்தை அவருக்கு வெளிப் படுத்தித் தன் இராஜாங்கத்தை அவருக்கு கையளித்து, தன் கொலைபாதகத்துக்குத் தகுந்த தண்டனையையும் தவக்கிருத்தியத்தையுங் கட்டளையிட மன்றாடினதின் மேல், பரிசுத்த பாப்பானவரும் அரசனுடைய மனுவுக்குக் காது கொடுத்து அவன் தன் தேசத்துக்குத் திரும்பிப் போய் முன்போல் இராஜாங்கம் செய்யும்படி கற்பித்தார்.

இந்தப் புரோகிராமை அங்கு கூடியிருந்தவர்கள் அனைவோரும் வாசித்துக்கொண்டிருக்கும்போது, மணி டாங் டாங் என்று எழு அடிக்கவே, நாடக மேடையின் திரைச்சீலைத் தாழ இறங்கினது.

ஒவ்வொரு திரையிலும் நூதனமான சித்தரப்படம் எழுதப்பட்டிருந்தது. முதல் திரையில் 13-ம் லியோ பாப்பானவருடைய ரூபம் நேர்த்தியாய்ச் சித்திரிக்கப்பட்டிருந்தது. இரண்டாவதில் விக்டோரியா ராணியவர்களின் ரூபமும், மூன்றாவதில் ப்ரின்ஸ் ஆப் உவேல்ஸின் ரூபமும், நான்காம் திரையில் விஜயரங்க மகாராஜா அவர்களின் ரூபமும், ஐந்தாவதில் விசாகப்பட்டண மேற்றிராணியாரின் ரூபமும், ஆறாவதில் மதிராஸ் கவர்னரின் ரூபமும் மிகவும் அலங்காரமாய்ச் சித்திரிக்கப்பட்டிருந்தது. திரைச்சீலைகளில் சித்திரிக்கப்பட்டிருந்த ரூபங்களைப் பார்த்தவர்கள் உடனே அறிந்துகொண்டார்கள் அந்தப் படங்களில் குறிக்கப்பட்டவர்கள் இன்னாரென்று.

திரைச்சீலை முதல் முதல் தாழ விழவே, வெகு நேர்த்தியாய்ச் சிங்காரிக்கப்பட்ட நாடக மேடையில் அநேகர் வரிசையாய் நின்றுகொண்டு, அங்கு அன்று சபை கூடியிருக்கும் கனவான்களுக்கு நல்வரவு கூறும் பாடலை மகா இன்பமாய்ப் பாடினார்கள். பியானோ, பிடில், கிளாரிநெட், பாஞ்சோ முதலிய வாத்தியங்கள் காதுக்கு மிகவும் இன்பமாய் முழங்கின. பிரதர் லியோ என்பவர் பாடகர்களுக்குமுன் நின்றுகொண்டு பாட்டுக் கச்சேரியை நடத்தினார்.

பாட்டுக் கச்சேரி முடிவு பெறவே, அந்த ஸ்கூல் மனேஜர் ஸ்வாமியார், அவ்வருஷத்து ஸ்கூல் ரிப்போர்ட்டை வாசிக்கத் தொடங்கினார்.

இந்த வருஷத்தில் 48 பிள்ளைகள் புதிதாய் ஸ்கூலில் சேர்ந்ததாகவும், கடந்த வருஷங்களை விட, அவ்வருஷத்து சர்க்கார் பரீட்சையில் அதிகம் பிள்ளைகள் தேறினதாகவும், அவர்களில் ஒருவனுடைய பெயர் பிரசிடென்சியில் முதல் ஸ்தானத்தில் வந்ததாகவும் தெரியப்படுத்தினார்.

அதுபோல் கைத்தொழில் வகுப்புப் பிள்ளைகளின் ரிப்போர்ட்டும் மிகவுந் திருப்திகரமாயிருந்ததுடன், அநேக பிள்ளைகள் முதல் கிளாசில் பாசாகி, நான்குபேர் ஸ்காலர்ஷிப் பெற்று அநேகருக்கு டிப்ளோமாவும் செர்டிப்பிக்கேட்டும் கொடுக்கப்பட்டதாகவுந் தெரியப்படுத்தினார்.

மூன்று மாதங்களுக்குமுன் இந்த ஸ்கூலை பரீக்ஷித்துப்போன சர்க்கார் ஸ்கூல் இன்ஸ்பெக்டர் எழுதிவைத்த ரிப்போர்ட்டாவது :—

“இந்த ஸ்கூலை நான் பரீக்ஷித்ததில் இது மிகவும் திருப்திகரமுள்ளதாகக் காணப்படுகிறது. உபாத்திமார் மிகவும் சிரத்தை பிரயாசையுடன் கல்வி கற்பிப்பதாகத் தெரியவருகிறது. பிள்ளைகளின் நடத்தையும் புகழத்தக்கது. பாண்டு வாசிக்கும் பிள்ளைகள், தாங்கள் கற்கவேண்டியதை நன்றாய் கற்றிருப்பதாக தெரியவருகிறது. என் முன்னிலையில் பிள்ளைகள் செய்த மிலிட்டெரி டிரில் வெகு சாமர்த்தியத்துடன் நடத்தப்பட்டது.

கைத்தொழில் வகுப்புகள் மிகவும் புகழத்தக்கவை. சித்திரப்படம் எழுதுதல், தச்சுவேலை, கருமான்வேலை, நெசவுவேலை முதலிய பல வேலைகள் நன்றாய்க் கற்பிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

ஆகையால் மிகவும் பிரயோசனகரமான இந்த டிப்பார்ட்மெண்டுக்கு சர்க்கார் அதிக தன சகாயம் செய்யும்படி நான் மிகவும் பலமாய்ச் சிபாரிஸ் செய்கிறேன்.

இப்படிக்கு,

ETON,

School Inspector.”

SISTER MARY ASSUNTA.
மரி அசுந்தா சகோதரி.
(மரியாயின் பிரான்சிஸ்கன் மிஷனரி கன்னிகை.)

1878—1905.
(முன் தொடர்ச்சி.)

மரி அசுந்தா பரீக்ஷைய ந்தஸ்தைச் சேர்ந்ததும், அதின் புதிய கடமைகளை யெல்லாம் தன் முழு இருதயத்தோடு நிறைவேற்ற அபேக்ஷைகொண்டாள். ஆரம்பத்திலிருந்து கீழ்ப்படிதலிலும், மௌனத்திலும், குறிக்கப்பட்ட அந்தந்த நேரத்தில் ஒழுங்குகளைத் திட்டமாய் அனுசரிப்பதிலும் மெத்த சுறுசுறுப்பைக் காண்பித்தாள். சிறுபத்திலேயே, பரித்தியாக முயற்சியில் தேர்ச்சியடையாமல் துறவற அந்தஸ்தில் உட்படுகிற அநேகர், துவக்கத்தில பத்தி சுறுசுறுப்புட னிருந்தாலும், நாளடைவில் அதில் தளர்ந்து போவதுபோல், மரி அசுந்தாவின பத்தி வேகமானது சற்றாகிலும் தணிந்துபோகவில்லை அவள் நெடுங்காலமாய் அத்தியந்த அவாவுடன தேடின ஜீவியத்தைக் கண்டடைந்தாள். அசசீவியமெல்லாம் செபம், அடக்கவொடுக்கம், உழைப்பு, பரித்தியாகம் இவைகளால முக்கியமாய் விளங்கினது. அவள தன் அழைப்பில ஓர் தேவ வரத்தைப் பெற்றதாகக் கண்டுணர்ந்தாள். அதின முழு அர்த்தத்தை இன்னும அவள் கிரகிக்காவிடினும அதினுடைய மேன்மையையும, தன்னை முற்றும பலியாக்கி அதனுடன ஒத்துழைக்கவேண்டிய அவசரத்தையும உணர்ந்தாள்.

ஆயிரக்கணக்கான பேர்களினின்று சர்வேசுரன் சிலரைத் தெரிந்துகொண்டு அவர்களைத் துறவற அந்தஸ்துக்கு அழைப்பதானது, நாவால் எடுத்துரைக்க முடியாத பரம இரகசிய மென்றும், அவ்வழைப்புக்கு ஏற்ற வகையாய்த் தங்களைத் தத்தம செய்து, தேவ ஊழியத்துக்குத் தங்களை முழுதும ஒப்படைப்பதே, அவர்கள் மேற் சுமந்த கடமையென்றும் அறிந்துகொண்டாள்.

1898-ம் வருஷம் அக்டோபர் மாதம் 9-ம் தேதி ரோமையில் அர்ச். எலேனுவின் கோவிலில் அசுந்தா, மரியாயின் பிரான்சிஸ்கன் மிஷனரி கன்னியரின் உடை தரிக்கும் பாக்கியம் பெற்றாள். அவள் தன பெயரை மாற்றாமல் அதனுடன் தேவமாதாவின் பெயரையும சேர்த்துக்கொண்டாள். அன்று தொடங்கி மரி அசுந்தா சகோதரி என்று அழைக்கப்பட்டாள். நவசன்னியாசத்தைச செய்துமுடிக்க குரோத்தா பெராத்தா என்ற ஊருக்கு அனுப்பப்பட்டாள். அதிகாரம்பெற்ற சிரேஷ்டர்களால நடத்தப்படும் ஒரு ஆத்துமம எவ்வளவுக்குத் தன்னைக் கீழ்ப்படுத்துமோ, அவ்வளவுக்கு அந்த ஆத்துமத்தினுடைய புண்ணியத்தின மேன்மையும விளங்கும என்று சாதாரணமாய்ச் சொல்லலாம்.

மேற்கூறிய ஒழுங்கைக்கொண்டு மரி அசுந்தாவின் புண்ணியமானது ஆரம்பத்திலிருந்தே உன்னதம் பெற்றோங்கினதென்று கூறுவது மிகையாகாது.—அவள தன பணிதலாலும, சந்தோஷமாயக் கீழ்ப்படிய எப்போதும தயாராயிருப்பதாலும, சிரேஷ்டர்களுடைய ஆனந்தமும் ஆறுதலுமாயிருந்தாள். அவர்கள் அவளுக்கு ஓர் உத்தரவு கொடுத்தாலும் சரி, அல்லது அதனை மறுத்தாலும சரி அசுந்தாவுக்கு எல்லாம் ஒன்றுதான. சிரேஷ்டருடைய உத்தரவைச சர்வேசுரனுடைய உத்தரவென்றே எண்ணினாள். எல்லாவற்றிலும் சிரேஷ்டர் கொடுத்த கட்டளைகளைச் சேசுநாதர்தாமே நேரில் வந்து கொடுத்த கட்டளைகளாகப் பாவித்து, அவைகளைத் துரிதமாயும சந்தோஷமாயும நிறைவேற்றுவாள்.

அசுந்தா சொற்பமாயப் படித்திருந்ததினால், அவளைச சபையின தாழ்ந்த அலுவல்களில வைத்தார்கள். சமையல் அறையிலும, வஸ்திரங்கள் வெளுக்கிற அறையிலும உதவி செய்வாள். வெகுகாலம் கோழிகள், பன்றிகள் முதலியவைகளைக் கண்காணித்துவந்தாள். எந்த வேலையும் அவளுக்குக் கடினமாகத் தோன்றவில்லை. எவ்விதமான முறைப்பாடும அவள் உச்சரித்ததில்லை. அவள் முகம் சதா புன்னகையுடன் மலர்ந்து விளங்கும.

எந்த நிமிஷமும் பிறத்தியாருக்கு உதவி செய்யத் தயாராயிருப்பாள். அவள எவ்வளவுதான் ஆவலாயிருந்தாலும் எவ்வளவுதான் சுறுசுறுப்பாய் இடைவிடாது உழைத்தாலும் தன் மன ஏகாந்தத்தையும், சர்வேசுரனுடன அவள் கொண்டிருந்த ஐக்கியத்தையும ஒருபோதும் இழக்கவில்லை. அவள் வேலை செய்யும்போது செபித்துக்கொண்டேயிருப்பாள். அவள் தனி

மையாயிருந்தாலுஞ் சரி, மற்றவர்களுடனிருந்தாலுஞ் சரி அவளுடைய நடையும் நிலையும், மேரை மரியாதையாய்க் கீழ்நோக்கின அவளுடைய கண்களின் அடக்கமும் அவளுடைய சர்வாங்கமும் அவள் சர்வேசுரனுடைய சமுகத்தில் சதா இருந்ததாகத் தெளிவாய்க் காட்டின. கோவிலில் அவள் எப்போதும் மகா பயபக்தி வணக்கத்துட னிருப்பாள். ஞான முயற்சிகளைச் செய்வதற்காகக் குறிக்கப்பட்ட நேரம் அவளுக்கு மெத்த சொற்பமாகத் தோன்றும்.

ஒருவருடைய சீவியத்தில் சகல புண்ணியங்களும் உன்னதமான வகையில் அநுசரிக்கப்பட்டிருந்தால், அவைகளில் ஒன்றை மாத்திரம் விசேஷமானதாக எடுத்துக் கூறுவது சுலபமல்ல. ஆனால் அர்ச்சியசிஷ்டவர்களின் முக்கிய இலட்சணமாக விளங்கின தாழ்ச்சியானது அசுன்தாவின் பிரதான புண்ணியம என்று குறிப்பிடலாம். அவளுடைய தாழ்ச்சியினின்று கீழ்ப்படிதல் பிறந்தது. அவள் தன்னை எல்லோரிலும் கடையானவளாகவும், நீசமானவளாகவும், சபைககு மிகவும் உபயோகமற்ற அங்கமாகவும் எண்ணியிருந்ததால், தன் சிரேஷ்டர்களுக்குக் கீழ்ப்படியாமலும், தனக்குச் சமானமானவாகளுடைய விருப்பங்களை நிறைவேற்றாமலுமிருப்பது எப்படி? ஒறுத்தலின்பேரில் அவளுக்கு இருந்த ஆசையானது அவளுடைய தாழ்ச்சியில் வேரூன்றி நின்றது. மெய்யாகவே தன்னை ஒரு மகா பாவியென்று எண்ணியிருந்ததினால், அவளுக்குப் பெரியோர் உத்தாவு அளித்திருப்பாரேயாகில், அவள் ஒழுங்கில் குறிக்கப்பட்டதற்கு மேல் அதிகமான தப முயற்சிகளைச் செய்து தன்னைக் கொரேமாய் வாதித்திருப்பாள்.

தன்னைத் தாழ்த்தவும் ஒறுக்கவும் அவள் ஓயாமல் காண்பித்த ஆசையை மட்டுப்படுத்த அவளுடைய பிள்ளைக்குரிய கீழ்ப்படிதல் உதவியாயிருந்தது. அவளுடைய சிரேஷ்டர் அவள் கேட்ட காரியத்தை மறுத்தாலும் சரி, அதனை அளித்தாலும் சரி முகமலர்ச்சியுடனும் அமைதியுடனும, சந்தோஷமான நன்றியறிதலுடனும் அதை ஏற்றுக்கொள்வாள். ஒரு நாள அவளுடைய கபடற்றதனத்தையும் நேர்மையையும் பரிசோதிப்பதற்காக அவளுடைய சிரேஷ்ட தாயார் அவளை ஓர் கஷ்டமான சோதனைக்கு உட்படுத்தினார்கள்.

அசுன்தா தன் சொந்த இஷ்டமாய் ஒரு சந்தி பிடிப்பதற்காக உத்தாவு கேட்டாள். கேட்ட உத்தரவைக் கொடாமல் சிரேஷ்ட தாயார் மறுத்து: "சகோதரியே, நீ எவ்வளவு போசனப்பிரியமுள்ளவ ளென்றும், ஒறுத்தலில்லாதவளென்றும் மற்றவர்கள் அறிந்துகொள்வது நலம். ஆதலால் இன்றையத்தினம் போசன சாலையில் உனக்காக முஸ்திப்பு செய்யப்பட்ட அதிகமான உணவுகளை நீ கீழ்ப்படிதலினிமித்தம் புசிக்கவேண்டும்" என்று கூற, "ஆம், ஆம், தாயாரே சர்வேசுரனுடைய நேசத்துக்காக நான் புசிப்பேன்" என்று விடை பகர்ந்தாள். அசுன்தா சகோதரியின் பெற்றோர் ஓர் காலத்தில் செல்வமாய் வாழ்ந்தவர்கள். அவள் பிறந்த பின்னர் வறுமையை யடைந்தார்கள். ஆயினும் அசுன்தா தாழ்ச்சியால் தான் தாழ்ந்த அந்தஸ்தில் பிறந்ததை ஒரு நாளும் மறந்தவளல்ல. அவள் மடத்துக்கு ஆஸ்தியாதொன்றும் கொண்டு வராததினால், தன்னை ஓர் பிச்சைக்காரி என்றும், சர்வமும் தர்மமாய்த் தனக்குக் கொடுக்கப்பட்டதென்றும் சிந்திப்பாள். தோட்டத்தில மற்றச் சகோதரிகளோடு வேலைசெய்ய அசுன்தா முதன்மையாகக் குறிக்கப்படுவாள். சில சமயங்களில் கனமாய்ப்பெய்த மழையினால் அவர்கள் நனைந்து போனால, அவாகள் உடைமாற்றிக் கொள்வதற்காகப புது வஸ்திரங்கள் அவர்களுக்குக் கொடுக்கும்படியாகக் கேட்பாள். ஆனால தனக்காக யாதொன்றும கேட்கமாட்டாள. உடுப்பு அறையை விசாரிக்கும் சகோதரி கட்டாயப்படுத்தி அசுன்தாவுக்குத் தேவையானதைக் கொடாவிடில், அவள சர்வேசுரனுடைய நேசத்துக்காகக் கொஞ்சம் கஷ்டத்தையும் வருத்தத்தையும் அநுபவிக்க இது ஒரு நலல சமயம் என்று சந்தோஷமாயும் அமைதியாயும் போய்விடுவாள். அவளுக்கு விரோதமாய்க் கூறப்பட்ட எவ்வித கடுஞ் சொற்களுக்கும், கண்டன மொழிகளுக்கும மாறாத முகம லர்ச்சியோடு "வந்தனம்" புரவது அவளுககுச் சுபாவமாய்விட்டது.

அவள் துறவற அந்தஸ்தில் சீவித்த காலமெல்லாம் அவள்பேரில அபாண்டமாய்ச் சுமத்தப்பட்ட குற்றங்களுக்காக முதலாய், எவ்வித ஞாயத்தையாவது வியாத்தையாவது சொலலிக் காணபித்துக்கொள்ள அவள முயன்றதில்லை.

தேவசிநேகம், பிறசிநேகம என்று சொல்லப்பட்ட திவ்ய புண்ணியங்கள் உண்மையான தாழ்ச்சியுடன் இணை பிரியாது ஓங்கி வளரும். தேவசிநேகமானது முழுதும்ம அவளை ஆட்கொண்டு நடத்தினது. அதினிமித்தம் சர்வேசுரனைப் பாவத்

தால் மனநோகப்பண்ண அவள் மெத்த அச்சம் கொண்டாள். அசுன்தாவை நன்ருய் அறிந்தவர்களும், அவளைப் பிரியமாய் நேசித்து வந்தவர்களுமாகிய சிரேஷ்ட தாய்மார்களில் ஒருவள் அவளைப்பற்றி பின்வருமாறு கூறுகிருள் :— "அசுன்தா எல்லாவற்றிற்கும்மேல் சர்வேசுரனை நேசித்தாள். அந்த நேசத்தினிமித்தம் ஒரு அற்பக் குற்றத்தினுல் அவரை மனநோகப் பண்ணவாவது. அவருக்காகப் போதுமானமட்டும் உழைக்காமல் வீணுய்க் காலத்தைக் கழிக்கவாவது அவள் பெரிதும் அச்சப்பட்டாள். இந்த அச்சத்தைப் பற்றிப் பல சமயங்களில் என்னிடம் பேசினுள். அதை விளக்கிச்சொல்ல வார்த்தைகளில்லாமல் கஷ்டப்படுவாள். இந்த உயிருள்ள தேவசிநேகம் அவளை எவ்வளவு பலமாய் ஆட்கொண்டதென்று அவள் நாவால் உச்சரிக்கக்கூடாத வார்த்தைகளை அவளுடைய முகத்தோற்றம் வெளியரங்கமாய்க் காண்பித்தது." அவளுடைய அந்தஸ்து அவளுக்குத் திருப்தியைத் தந்ததாவென்ற வினவினதற்கு:— ஆண்டவர் என்மட்டில் எவ்வளவு நல்லவர். நான் அவ்வளவு நேசத்துக்குப் பாத்திரவதியல்ல" என்பாள் அசுன்தா. சேசுவைப்பற்றி அவளிடம் சம்பாஷித்தால் அவள் காண்பிக்கும் சந்தோஷத்திற்கு அளவில்லை. அவளுடைய வதனகமலம் அக்கினியால் பற்றியெரிவதைப் போல் பிரகாசிக்கும். அவள் சர்வேசுரனைப்பற்றியும் ஞானக்காரியங்களைப்பற்றியும் வெகுவாய்ச் சம்பாஷித்ததினுல் சகோதரிகள் எப்போதும் அவளுடன் இருக்கப் பிரியப்படுவார்கள். "எல்லாம் சர்வேசுரனுடைய நேசத்துக்காக, எல்லாம் சேசுவுக்காக" என்ற வார்த்தைகளை அவள் சாதாரணமாய் உச்சரிப்பாள்.

ஒரு நாள் அவள் உடுப்புகள் வெளுக்கிற அறையில் வேலையாயிருக்கும்போது உடைந்து போன ஒரு ஊசியின் துண்டு அவள் கையில் ஆழமாய் ஊடுருவித் தைத்தது. துவக்கத்தில் அதைப் பற்றி அவள் யாதொன்றும் சொல்லவில்லை. ஆனுல் அவளுடைய கை வீங்கிப்போனது. அவ் வீக்கத்தை டாக்டரிடம் காண்பிக்கவேண்டியதாயிற்று. அவர் அதை உடனே அறுத்து திறக்க வேண்டுமென்ருர். அப்படியே அதை அறுக்கும்போது அசுன்தா சகோதரி மெத்த வாதனை அநுபவித்தாள். அவளுடைய கண்களில் கண்ணீர் ததும்பினது. ஆனுல் ஒரு வார்த்தையும் பேசாமல் மௌனம் சாதித்தாள். டாக்டர் அவளை நோக்கி அவளுக்கு தான் வருவித்த நோக்காட்டைப்பற்றி வினவ, அசுன்தா "அது ஒன்றுமில்லை ; நமதாண்டவர் பாடுபடும்போது எனக்காக இன்னுமதிகமாய் வாதனைப்பட்டார்" என்ருள். டாக்டரும் அங்கு இருந்த சகோதரிகளும் அவள் சர்வேசுரன் மட்டில் காண்பித்த அத்தியந்த வேகமான நேசத்தையும், சுய பரித்தியாகத்தையும் பார்த்து புண்ணிய வழியில் ஒழுக மிகவும் ஆசைகொண்டார்கள்.

அவளுடைய சகோதரிகள் மட்டில் அவள் காண்பித்த பிறசிநேகம் நாவால் வருணிக்க முடியாது. தன்னுடைய சொந்த கஷ்டமான வேலைகள் முடிந்ததும் யாருக்கு ஒத்தாசை புரியலாமோ என்று சமயம் தேடுவாள். எல்லா வேலைகளிலும் அதிக தாழ்ந்ததும் கஷ்டமுமுள்ளதைத் தனக்கென்று தெரிந்துகொள்வாள். மிக்க தாழ்ந்தவேலைகளைச் செய்வதற்கு இவ்வளவு பிரியம் காண்பிப்பதற்குக் காரணம் என்னவென்று ஒரு நாள் அவளைக் கேட்டபோது, "நமது அதிசிரேஷ்ட தாயார் தன்னுடைய குமாரத்திகள் எல்லோரும் அர்ச்சியசிஷ்டவர்களாக இருக்க வேண்டுமென்று ஆசிக்கிருர்களே. நானே ஒன்றும் அறியாத ஓர் எழைப்பேதை. மிக்க தாழ்ந்த அலுவல்களைச் செய்தாலொழிய நான் அர்ச்சியசிஷ்டவளாக முடியாது" என்ருள். ஒரு நாள் சாய்ரக்ஷை. வஸ்திரங்களுக்கு இஸ்திரி போடுகிற வேலை அதிகமாயிருந்ததினிமித்தம் அசுன்தாவும் அவளுடைய தோழியும் இரவில் நெடுநேரம் விழித்திருந்து அந்தவேலையை முடித்துவிட உத்தரவு கேட்டார்கள். அதைப்பற்றி கன்சொலாத்தா (Consolata) சகோதரி பின்வருமாறு எழுதுகிருள் :—"நாங்களிருவரும் ஒருநாளெல்லாம் துணிகளை ஒழுங்காய் வைத்து இஸ்திரி போடுகிற வேலையை மிகவும் கஷ்டப்பட்டு செய்தோம் ; நாங்களிருவரும் மிகவும் களைத்துப்போயிருந்தோம். ஆனுல் அசுன்தா சகோதரி தன்னந்தனியாய் அவ்வேலையை முடித்துவிடக் கூடுமென்று சொல்லி என்னைப் படுத்து நித்திரை செய்யும்படியாகக் கேட்டுக்கொண்டாள். இராத்திரி அதிக நேரமாய்விட்டது. ஆனுல் அவள் பேசின வார்த்தைகளிலும், அவள் காட்டிய நன்மாதிரிகையிலும், அவள் முகத்தோற்றத்தில் வெளிப்பட்ட பத்தி சுறுசுறுப்பையும் நமதாண்டவருக்குத் தன் களைப்பையும், இளைப்பாற்றியில்லாமையையும் ஒப்புக்கொடுப்பதற்காக அவள் எவ்வளவோ சந்தோஷப்பட்டாள் என்பதையும் கண்டு அவளைத் தனிமையாய் விட்டுப்போக

நான் சம்மதிக்கவில்லை. ஆதலால் எங்கள் முழு இருதயத்தோடு வேலை செய்துகொண்டும், செபித்துக்கொண்டும், அந்த இரவின் பெரும் பாகத்தைச் செலவழிக்கலானோம். ”—வியாதியஸ்தர் மட்டிலும் துன்பப்படுகிறவர்கள் மட்டிலும் அவளுடைய பிரசிநேகமும் பொறுமையும் மெத்த உருக்கமான பற்றுதலுடன் விளங்கின.

வியாதியஸ்தருக்கு உதவி செய்யும் பொருட்டு அவள் சன்னிஷ்டமாய்த் தன் இளைப்பாற்றியையும் நித்திரையையும் இழந்துவிடுவாள்.

1900-ம் வருஷம் அமலோற்பவமாதா திருநாளன்று பக்தி சுறுசுறுப்புடனும் எல்லோருக்கும் நன்மாதிரிகையாகவும் நடத்தப்பட்ட நவசந்நியாசம் முடிந்ததும் வார்த்தைப்பாடு கொடுப்பதற்காக அசுன்தா சகோதரி தெரிந்துகொள்ளப்பட்டாள்.

1902-ம் வருஷம் நவம்பர் மாதம் வரையில் (Grottaferrata) க்ரோத்தாபெர்ராத்தாவில் இருந்தாள். அதற்குப்பின் (Florence) ப்ளோரென்ஸ் என்னும் நகருக்கு, அங்கு புதிதாய் மடம் ஸ்தாபகமான காலத்தில், அனுப்பப்பட்டாள். க்ரோத்தாபெர்ராத்தாவில் நடந்துகொண்டது போல் அவ்விடத்திலேயும் மெத்த உழைப்பாலும் செபத்தாலும், பிரசிநேகத்தாலும், ஆத்தும இரட்சண்ணியத்தின் அபேக்ஷையாலும் தன் சீவியத்தைப் பயன்படுத்திச் சிறப்பித்துவந்தாள். அங்கு இருக்கும்போதுதான் நித்திய வார்த்தைப்பாடு கொடுக்க அவளுக்கு உத்தரவு அளிக்கப்பட்டது. இதற்கு முஸ்திப்பாகத்தான் அவள் தன் சீவியமெல்லாம் வியக்கத்தக்க விதமாய் நடத்திவந்தாள்.

S. M.

(இன்னும் வரும்.)

தன்னைத்தா னறியாத மூடரெல்லாந்
தானுலகிற் குருக்களென்று பெயருஞ் சொல்வார்.
பின்னைத்தான் பிரவாத நெறியுங் காணார்
பேசாத மந்திரத்தின் பொருளை காணார்.
முன்னைத்தான் பெரியோர்கள் சொன்ன நூலின்
முறைமையறியாதார் வீண் மூடரெல்லாம்
என்னத்தார் சீஷனுக்கு முத்தி காட்டி
ஈடேற்றங் கொடுப்பதுவு மியல்பிலாரே.
—(அகஸ்தியர் விருத்தம்.)

THE HISTORY OF ST. MONICA.

அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(*All rights reserved.*)

முதல் அதிகாரம்.

அர்ச். மோனிக்கம்மாளின் குடும்ப விசேஷங்கள்—அவள் ஜனனமும் பாலப் பருவத்தின் பிரதம வருஷங்களும்—அவளது விவாகமும்.

(இரட்சண்யம் 332—353.)

(முன் தொடர்ச்சி.)

அவர்களின் உலக அந்தஸ்தைப்பற்றித் திட்டமாய்ச் சொல்வது மெத்தக் கஷ்டமாயிருக்கிறது. தேசத்தில் கலகம்நடந்துவருங் காலங்களில், நாம் சில பிரபுக் குடும்பங்களைக் கண்டும் அப்பேர்ப்பட்டவைகளைப் பற்றிக் கேள்விப்பட்டும் வருகிறோம். அக்குடும்பத்தார் அதிக ஐசுவரியமுள்ளவர்களாயிராவிட்டாலும், அவர்களுடைய பூர்வீக அந்தஸ்து அதிக மேன்மையுள்ளது. அவர்களுக்கு அநேக வேலைக்காரர்கள் உண்டு. அவர்கள் எப்போதும் நல்ல குடும்பங்களிலேயே சம்பந்தங் கலப்பார்கள். அவர்களுடைய பந்துக்களுள் அநேகர் பிரபலம்பெற்றவர்களாயிருப்பார்கள். இருந்தாலும், அவர்கள் ஏதோ ஒரு நியாயமான முகாந்தரத்தைப்பற்றிப் புறத்தி ஜனங்களோடு அதிகமாய்ப் பேசிப் புழங்காமல் அடக்கமாய் சீவித்துவருவார்கள். அர்ச். மோனிக்கம்மாள் இப்படிப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவளாகவே காணப்படுகிறது. நான் இப்போது எழுதும் இச்சரிதைக்கு இருபது வருஷத்திற்கு முந்தி, த்கார்ஸ்தே பட்டணத்தாரனைவரும் கத்தோலிக்குத் திருச்சபையை விட்டு டோனாதுஸ் என்னும் பிரிவினைச் சபையில் சேர்ந்துகொண்டபோதிலும், இந்தக் குடும்பம் ஒன்று மாத்திரமே பத்திப் பிரமாணிக்கத்துடன் சத்திய திருச்சபையோடு ஐக்கியம் கொண்டிருந்தது. அக்காலத்தில் தேசத்தில் நடந்துவந்த புரளியினாலும், வேத கலாபனையினாலும், இக்குடும்பத்தார் தங்கள் சொத்து சுதந்தரங்களை இழந்து, இன ஜன பந்துக்களால் வெறுக்கப்பட்டு, தன்னந் தனியராய்ச் சீவித்துவர நேர்ந்

தது. கிறீஸ்துவர்களா யிருப்பவர்கள் மற்றவர்களைவிட அதிகமான வரி செலுத்தவேண்டியதென்று ஒரு இராஜ கட்டளையும் அக்காலத்தில் இருந்தது. ஆனல் கொன்ஸ்தான்தீன் அரசன் சிம்மாசன மேறியபிறகு, அக்கட்டளையை ரத்துசெய்து கிறீஸ்துவ குடும்பங்களுக்கிருந்த நெருக்கிடைகளை நீக்கினன். ஆகிலும், முடிவில் தியோக்கிலேசுமன்னன் செய்த முயற்சிகளைப் போலவே, இவ்வரசன் செய்த முயற்சிகளும் நிஷ்பலனுய்ப் போயின. ஆனகால், அர்ச். மோனிக்கம்மாளின் பெற்றோர்; இவ்வேத கலாபனையால் தங்கள் செல்வ நிலைமை மாறி, தங்கள் கீர்த்திப் பிரதாபம் யாவும் மங்கிப்போகுமென்றும், தங்கள் குமாரத்தி தங்களுடைய குடும்பப் பெயரைத் தரித்திருந்தபோதிலும் தாரித்திர அந்தஸ்திலிருந்து தன் பூர்வீக நிலைமையை எண்ணி எண்ணி ஏக்க மிடுவாளென்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் துலக்கமாய் கண்டார்கள்.

இப்பேர்ப்பட்ட துன்ப துயரத்தில் நாள் கழித்துவந்த அர்ச். மோனிக்கம்மாளின் பெற்றோர், உலக பெருமை ஆடம்பரங்களில் தங்கள் மனதைச் செலுத்தாமல், ஞானக் காரியங்களில் வேகமான பற்றுதலைக் காட்டி, தங்களுடைய பாலகிக்கு நற்போதனைகளைப் போதித்து, அவளுடைய ஆத்துமத்தை விசுவாசத்திலும் நன்னெறியிலும் திடப்படுத்திவந்தார்கள். மோனிக்கம்மாளோவெனில் தன் பெற்றோரிருந்த உலக நிலைமையின் பலனைவும், அவர்களிடமிருந்து தன் பாலியத்திலேயே தான் அடைந்த சுகிர்த போதனையின் பலனைவும், தான் இன்னம் சின்னஞ் சிறுமியாயிருக்கும்போதே, நீர்மேற்குமிழி போல் நிலையின்றி அழிந்துபோகும் உலகத்தையும் அதன் சுக போகங்களையும் வெறுத்து, அழிவில்லாத நித்திய மோட்சானந்த பாக்கியத்தை அத்தியந்த ஆவலுடன் நாடித் தேடத் தொடங்கினள். இப்படிப்பட்ட ஆவல் அவளுடைய அந்தியகால பரியந்தம் மாருமல் ஊர்ஜிதங் கொண்டிருந்தது. இதுவே அவளுடைய சுகுண நடத்தையின் விசேஷ இலட்சணமாகக் காணப்பட்டது.

அர்ச். மோனிக்கம்மாள் தான் சிறவத்தில் அடைந்த ஞான போதனைகளைப்பற்றிச் சம்பாஷிக்கும்போது, தன் ஆத்தும விஷயமாய் தனது தாயாருக்கிருந்த கவலையை வெகுவாய்ப் புகழ்ந்து பேசுவதுடன், தன் பாலியத்தில் தனக்குத் தாதியாயிருந்த ஒரு விருத்தாப்பிய வேலைக்காரிக்கு தனது நடத்தையின் மட்டில் இருந்த பொறுப்பையும் நன்றியறிதலுடன் எடுத்துக்காட்டுவாள். இந்த ஊழியக்காரி அர்ச். மோனிக்கம்மாளுக்குச் செவிலித்தாயா யிருந்தவள் வாலிபமான தாய்மார்கள் தங்கள் சிறு குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு போவதுபோல், இவளும் மோனிக்கம்மாளைச் சிறவத்தில் தூக்கி வளர்த்தவள். மோனிக்கம்மாள் பருவமடைந்து கலியாணம் செய்து கொண்டபோது முதலாய், கூட இருந்து அதை நடத்திவைத்தனள். இக்காரணத்தைப் பற்றியும் இவளுடைய விருத்தாப்பிய தசையைப்பற்றியும், சுகிர்த நடத்தையைப்பற்றியும், மோனிக்கம்மாள் இவளை அத்தியந்த வினய வணக்கத்துடன் விசாரித்துவந்தாள். ஆதலால் தனக்குப் பிள்ளைகள் பிறந்தபோது, அப்பிள்ளைகளுக்குத் தாதியாக அல்லது இரண்டாவது தாயாராக, இதே ஊழியக்காரியைத் தெரிந்துகொண்டாள். இவள் ஞான வைராக்கியமும், விவேகமும், கண்டிப்புமுள்ளவள். ஆனல் கொஞ்சம் வெடுவெடுப்புக்காரி. தன் காபந்தில் ஒப்புவிக்கப்பட்ட பாலகியின் மட்டில் மாருக்கவலைகொண்டு, பிற்காலத்தில் சிறந்த அர்ச்சியசிஷ்டவளாய் மகிமையுடன் துலங்கப்போகும் அவளை, இமையாக் கண்விழிப்போடு பராமரித்துப் பாதுகாத்துவந்தாள். பூர்வீக கிறீஸ்துவர்களுள் உதயதாரகைகளைப்போல் தோன்றித் துலங்கிவந்த விசுவாசமும் பிரமாணிக்கமுமுள்ள ஊழியக்காரிகளுக்கு இவளைச் சரியாய் ஒப்பிடலாகும். பூச்சிப் புழுக்களின் அரிப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டு, நேச கவலையுடன் பராமரிக்கப்பட்டு வருகின்ற வோர் இளஞ்செடியானது, எப்படிச் சீக்கிரத்தில் பூவும் பழமும் விட்டுப் பலன் தரக்கூடுமோ, அப்படியே அர்ச். மோனிக்கம்மாளும் தன் இளவயதிலேயே புண்ணியப் பேறுகளாலும் நற்கிரியைகளாலும் பூரித்துத் துலங்கிவந்தாள்.

அவள் இன்னும் சிறுமியாயிருக்கும்போதே, தன் தாதிக்குந் தெரியாதபடி பக்குவமாய்க் கோவிலுக்கு ஓடிப்போய், அங்கு ஒரு தனிமூலையில் இடந்தேடி உட்கார்ந்து, தன் இரு கைகளையும் பக்தியோடு குவித்துக்கொண்டு, ஆழ்ந்த தியானத்தில் அமிழ்ந்தியிருப்பாள். இப்படி தன் சர்வேசுரனேடு சம்பாஷணை செய்வதில் அதி மதுரமான மனே ஆறுதலை அடைவாளாகையால், வெகுநேரம் ஜெபத்தில் நிலைத்திருப்பாள். வீட்டுக்குப் போக நேரமாயிற்றென்று முதலாய்த்

அவளுக்குக் கியாபகம் வராது. தன்னந்தனியாய் வெளியேபோய் நேரந்தப்பி வந்தோமேயென்று அவள் மனக்கலக்கமடைந்து என்னசெய்வதென்று தெரியாமல், திகில் கொண்டிருக்கும் போது, அவளுடைய தாதி அவளைக் கடினமாய்க் கண்டிப்பதன்றியும் சில சமயம் அடித்துந் தண்டிப்பாள். இப்படி அவளை அடித்துத் திட்டினாலும், ஒரு முறைப்பாடான வார்த்தையும் அவள் வாயிலிருந்து புறப்படாது. தன் தாதியின்மட்டில் அவள் காட்டிவந்த நேசம் பொருந்திய வணக்கம் சற்றுகிலும் குறையாது, மாறாது. சில சமயம் அவள் தன் கூட்டாளிகளுடன் ஆடிக்கொண்டிருக்கும்போது திடீரென்று காணமற் போவாள். அவளுடைய தோழிமார்: ஐயோ! இதென்ன! எங்கே போனாள், என்று அவளைத் தேடிப்பார்க்க, அவள் ஆட்டத்தை மறந்து, ஒரு மரத்தின் அடியில் ஆழ்ந்த தியானத்தில் அமிழ்ந்திருக்கக் காண்பார்கள்.

அடிக்கடி இராக்காலத்தில் அவள் யாருக்குந் தெரியாமல் எழுந்து, தரையின்மேல் முழங்காலூன்றித் தன் இருகரங்களைக் குவித்துக் கொண்டு, தன் தாயார் தனக்குக் கற்றுக்கொடுத்திருந்த செபங்களை சாவதானத்தோடும் தன் வயதுக்கு மிஞ்சிய உருக்கப் பெருக்கத்தோடும் செபிப்பாள். செபம் செய்யும் விதத்தை அவள் நன்றாய் அறியும்படியாகவும், அதினால் உண்டாகும் மனோ ஆறுதலை அனுபவத்தில் கண்டு மனோ சந்தோஷங் கொள்ளும்படியாகவுமே, அவளுடைய பாலிய பிராயத்திலிருந்தே கர்த்தர் இப்படிப்பட்ட விகிதத்தோடு அவளுடைய தூய இருதயத்துடன் சம்பாஷித்துவந்தார் என்பதாக தோன்றுகிறது. பிற்காலத்தில், இச்செபத்தையே அவள் ஆச்சரியத்துக்குரிய பற்றுதலுடன் கையாடிவந்தாள். செபம் என்னும் வல்லபமுள்ள ஆயுதத்தை எப்படிப் பிரயோகிப்பதென்று, சிறுவத்திலேயே சுவாமி அவளுக்குக் காண்பித்துவந்ததால், பிற்காலத்தில் அதைக் கொண்டே தன் ஆத்தும சத்துராதிகளைப் போராடி ஜெயித்தாள்.

இப் பருவத்தில், அவளுடைய நடத்தையில் ஒரு விசேஷ சற்குணம் காணப்பட்டது. அதாவது எளியவர்களின் மட்டில் அவளுக்கிருந்த அத்தியந்த நேசமேயாம். "ஐயமிடுமின் அறநெறியைக் கைப்பிடிமின், இவ்வளவேனு மன்னமிட்டுண்மின்" என்ற மூத்தோர் வார்த்தைக் கிணங்க, தான் சாப்பிடும்போது தனக்குக் கொடுக்கப்படும் அப்பத்தின் ஒரு பாகத்தை அடிக்கடி மறைவாய் எடுத்துவைத்து, யாரும் தன்னைக் காணாத சமயம் பார்த்து, தெருவாசலுக்கு ஓடி யாராவதொரு ஏழையைத்தேடி, அவனுக்கு அதைக் கொடுத்துவிடுவாள். அவள் வெகுவாய் நேசித்துவந்த வறியவர்கள் இரு தரத்தார். அவர்கள் யாரென்றால், ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குப் பயணமாய்ப் போகும் ஏழைகளும், ஆஸ்பத்திரியிலிருக்கும் எளிய பிணியாளர்களுமாம். பிறருக்கு அன்போடு உபசரணை செய்வது தன் தகப்பனுடைய வழக்கம். தன் வீட்டுவாசலின்முன் பிரயாணிகள் வருவதை இவள் கண்டதும், அவர்களுக்கென்று போடப்பட்டிருக்கும் விசுப்பலகையின்மேல் அவர்களை உட்காரவைத்து, அவர்களுடைய பாதங்களைக் கழுவ உத்தாரந் தரவேண்டுமென்று, பூர்வீக வழக்கப்படி பணிதலுடன் அவர்களைக் கேட்பாள். ஆஸ்பத்திரிக்குப்போய் வியாதியஸ்தர்களைச் சந்திப்பாள். தன் இளம் பருவத்திற்கு மிஞ்சிய அபூர்வமான நேசத்துடன் இவ்விருதரத்தாரான ஏழைகளுக்கும் ஊழியம் செய்வாள். அவளுடைய முகத்தில் மதுரமும் சாந்தமும் தெய்வீக சமாதானமும் சோதிப்பிரபையோடு துலங்கும். அவள் தன்னுடைய சிநேகிதிகளுடன் விளையாடும்போது, அச்சிநேகிதிகளுக்குள் ஏதாவது சண்டை சச்சரவு நேரிட்டால், அவள் ஒரு வார்த்தைசொன்னால் போதும், அவர்களுடைய சண்டை சச்சரவு யாவும் சூரியன்முன் பனிபோல் ஒழிந்துபோகும். அவள் முகம், அவள் தொனி, அவளுடைய நடை உடைபாவனை முதலிய யாவும் அடக்கத்தையும் சாவதானத்தையுமே காட்டுமாகையால், பெரியவர்கள் முதலாய் அவளைக்கண்டு, பூவோடு கூடிய நாறு மணம் பெறுவதுபோல், அடக்க ஒடுக்கப் பயிற்சியில் உயர்வார்கள். ஒரு பெரிய அர்ச்சியசிஷ்டவருக்குத் தாயாராயிருக்க இவளை ஆயத்தம் செய்யும்படிக்கு, கர்த்தர் இவளுக்கு அளித்த வரப்பிரசாதங்களின் பலனாகவும், தாதி அவளுடைய நடபடிக்கையின் மட்டில் காட்டிவந்த ஜாக்கிரதையின் பலனாகவும் வேறுபல நல்லொழுக்கங்களிலும் தேர்ச்சியடைந்தாள்.

அர்ச். அகுஸ்தீன் என்பவர், தாம் எழுதிய சங்கீர்த்தனம் (Confessions) என்னும் புஸ்தகத்தில் இந்தத் தாதியைப்பற்றிப் பேசுவதேதெனில், "இவள் அர்ச். மோனிக்கம்மாளின் நன்னடத்தையின் மட்டில் மிகுந்த கண்விழிப்பாயிருந்து, உசிதமான விவேகத்துடன் அவளை

நடத்திவந்தபடியால், அவளுடைய இருதயம் இளமையிலேயே, மேம்பாடான புண்ணிய முயற்சிகளை நாடித் தாவிற்று. மட்டுத்திட்டத்துடன் போசனம் செய்யச்செய்வாள். போஜன வேளையிலன்றி மற்ற வேளைகளில் தாகமாயிருந்தாலும் ஒரு துளித் தண்ணீர் முதலாய் தொடவிடமாட்டாள்" என்பதே. இதனால் சிறுவத்திலேயே, அமைவு, தபசு, மன உறுதி, சுயப்பரித்தியாகம் முதலிய இன்றியமையாத சுகிர்த இலட்சணங்கள் அவளிடம் தோன்றின. இப்படிப்பட்ட இலட்சணங்களில்லாவிட்டால், சரியான கிறீஸ்துவளாயும், சரியான சமுசாரியாயும், சரியான மாதாவாயும், சரியான அர்ச்சியசிஷ்டவளாயும், எவளும் இருக்கமுடியாது. "ஓ என் கடவுளே, என் தாயார் ஒரு காலத்தில் எப்பேர்ப்பட்டவள் ஆவாள் என்று, அவளுடைய பெற்றோர்கள் கிஞ்சித்தும் அறியாதிருந்த நாளையில், நீர் அவளை எவ்விதமான சுகிர்த பூஷணியாய் உருப்படுத்தினீர். உமது திவ்ய திருச்சபைக்குச் சார்ந்த ஒழுங்கு கிரமமுள்ள குடும்பங்கள் ஒன்றில், பத்திநிறைந்த தாய்தந்தையர் வயிற்றில், அவள் பிறக்கவும், அக்குடும்பத்தில் உமது தேவ குமாரனின் கண்காணிப்பில், ஞானத்திற்கு ஆரம்பமாகிய தேவ பயத்தில், அவள் வளர்ந்துவரவும் சித்தங்கொண்டீர்" என்று அர்ச். அகுஸ்தீன் வியப்புடன் கூறியிருக்கிறார்.

இப்படி மதுரம் நிறைந்த சோதிப்பிரபையுடன் அரும்புவிட்டுப் புண்ணியப் புஷ்பங்களாய் மலரும் மொக்கில், அதாவது அர்ச். மோனிக்கம்மாளின் நல்நடத்தையில், நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்ததும்போல் ஒரு அற்பசேஷம் தொடர்ந்து வந்தது. அச்சேஷத்தை யான் தோஷமென்று சொல்லமாட்டேன். ஆனால் தமது தாசர்கள், அதிக ஜாக்கிரதையாயிருந்து பரிசுத்தமுள்ளவர்களாகும்படியாகக் கர்த்தர் சில சமயங்களில் அவர்களிடம் தோன்றவிடும் அற்ப சொற்பக் குறையேயன்றி வேறல்ல. அது சிறு பெண்களுக்கு வீட்டுப்பணிவிடைகளைக் கற்பிக்கவேண்டுமென்று இருக்கும் சம்பிரதாயத்தின்படி, இவள் தினந்தோறும் திராட்சரசம் வைப்பிருக்கும் அறைக்குப்போய், அன்றன்றைக்கு வேண்டிய அளவுபிரகாரம் திராட்சரசம் கொண்டுவரவேண்டுமென்று ஒரு கட்டளை இவளுக்கிருந்தது. இச்சமயத்தில் அர்ச். அகுஸ்தீன் என்பவர் சொல்வதுபோல், "அவள் தான் கொண்டுபோகும் பாத்திரத்தை இறக்கி வேண்டிய அளவு நிரப்பிக்கொண்டு புட்டியில் வார்க்குமுன், ஓரோர் சமயத்தில் அதில் கொஞ்சம் குடிப்பாள். அற்பக் குற்றங்களை அசட்டை செய்வதினால் நாம் நாளாவட்டத்தில் பெரிய தப்பிதங்களைக் கட்டிக்கொள்ள வழியாவதுபோல், தினந்தோறும் அவள் ஒவ்வொரு துளி அதிகதிகமாய்க் குடித்துவந்து, கடைசியில் ஒருமட்டாய் ஒரு கோப்பை நிறையக் குடிக்கத் தலைப்பட்டாள். ஆனால் விவேகமும் விருத்தாப்பியமுமுள்ள அவளுடைய தாதி எங்கே? அவள் கற்பித்துக்கொடுத்த சன்மார்க்கப் போதனைகள் என்னவாயின? கர்த்தாவே! நீர் மாத்திரம் அவளை அவ்வளவு உருக்கத்துடன் பாதுகாத்து வந்திராவிட்டால், இப்படி அவளுடைய தகப்பனும் தாயாரும் மற்றப் பெரியோரும் இல்லாத வேளையில், அவள் அவ்வளவு இரகசியமாய்ப் புரிந்துவந்த தீமையை, எவ்விதமாய்த்தான் விலக்கியிருக்கக் கூடும்? நீர் எக்காலத்திலும் சர்வ வியாபகராயும், சர்வாந்திரியராயுமிருந்து, துஷ்டரைக்கொண்டும் ஆத்துமங்களை இரட்சிக்கிறீர்!"

"மோனிக்கம்மாள் திராட்ச இரச அறைக்குப் போகும்போது, ஒரு வேலைக்காரப் பெண்ணைக்கூட அனுப்புவது சாதாரண வழக்கமாயிருந்தது. இந்தப்பெண்ணோவெனில், அவள் திராட்ச இரசத்தைப் பானம் செய்வதைப் பார்த்தாலும் தாட்சணியத்திற்காக சும்மாயிருப்பாள். இவளே கடைசியாய் அவள் இருதயத்தை ஊடுருவத்தக்க கடுஞ்சொல்லால் அவளைக் கண்டித்தாள். நமதர்ச்சியசிஷ்டவளிடம் தோன்றிய இவ்வழுக்களை அறுத்தெடுத்துவிடும்படி கர்த்தர் யாருமறியாமல் உபயோகித்த கத்தி இதுவேயாம். எஜமாட்டி சிறுமியாயும் அநுபோகமில்லாதவளாயுமிருக்குங் காலையில், சாதாரணமாய்ச் சம்பவிப்பதுபோல், ஒரு நாள் மோனிக்கம்மாளும் பணிப்பெண்ணும் தனியாயிருக்குபோது, இவர்களுக்குள் ஒரு சச்சரவு நடந்தது. அப்போது வேலைக்காரி மேற்கண்ட குற்றத்தைச் சாட்டி, அதிக அவமரியாதையாக மோனிக்கம்மாளைக் குடிகாரியென்று இகழ்ந்து தூஷணித்தாள். விஷந் தடவியெய்யப்பட்ட அம்பைப்போல் தன்னிருதயத்தில் ஊடுருவிப் பாய்ந்த இக்கடும் வார்த்தையை மோனிக்கம்மாள் கேட்டதும், வெட்கங்கொண்டு, தலை கவிழ்ந்து, தன் தப்பிதத்தின் கனகனத்தையுணர்ந்து, இனிமேல் அப்படிப்பட்ட தோஷத்தையொருக்காலும் கட்டிக்கொள்வதில்லையென்று ஒரே கண்டிப்பாய்த் தீர்மானித்தாள்."

அது மாத்திரமல்ல, தன் ஜீவியகால முழுதும் தண்ணீர் தவிர வேறெந்தப் பானத்தையும் தான் குடிப்பதேயில்லையென்று, பிரதிக்கினை செய்ததாகவும் சிலர் சொல்லுகிறார்கள். இது எப்படியாவதிருக்கட்டும். அர்ச்சியசிஷ்டவர்களுடைய சரிதைகளில் நாம் வாசிக்கிறதுபோல், அவளுடைய தீமையிலிருந்து கடைசியில் நன்மையே விளைந்தது.

அவ்வேலைக்காரி தன்னைத் தூஷித்த தூஷணையைக் கேட்டதும், பச்சாத்தாபக் கண்ணீர்களைச் சிந்தி, பஞ்சேந்திரியங்களை அடக்கி ஒடுக்க வேண்டுமென்று ஆசித்து, தான் அதிக கேவலமான மட்பாண்டமென்பதாய்த் தாழ்ச்சியுடன் சிந்தித்து, தன்னைப்பற்றி மிஞ்சிய நம்பிக்கைக் கொள்ளலாகாதென்று மோனிக்கம்மாள் தீர்மானித்தாள். மேலும் ஒருநாள் தன் பராமரிப்பில் ஒப்புவிக்கப்பட்டிருந்த அந்த மகிமையிலங்கிய பாலகனை, அத்தியந்த ஜாக்கிரதையுடன் பாதுகாத்து வரும்படி, இப்போதே தான் எச்சரிக்கையாய் நடந்து தாயகக் குரிய அவ்வலுவலுக்குத் தக்கபடி தன்னை ஆயத்தஞ் செய்துகொள்ள அத்தூஷணையே காரணமாயிருந்தது.

இதனிடையில், சுமார் இரட்சண்யம் 348 அல்லது, 349-ம் வருஷத்தில், மோனிக்கம்மாள் ஒரு புது ஏற்பாட்டைக் கேட்டறிந்து அத்தியந்த சந்தோஷ சாகரத்தில் அமிழ்ந்தினள். அவ்வேற்பாட்டின் பயனாக, அவளது யௌவன பருவத்தில் அப்போதுதான் அரும்புவிட்டுத் தோன்றிய குண இலட்சணங்கள் முற்றிப் பழுத்துப் பூரண பக்குவமடைந்தன. நாம் சொன்னதுபோல, தகாஸ்தே என்னும் பட்டணம் தோனதூஸ் என்பவனுடைய பிரிவினைக்குட்டிருந்ததால், இந்தக் கொடிய பிரிவினைச்சபையானது அவளுக்கு 20-வருஷம் வரைக்கும் அதிக சங்கடங்களுக்குக் காரணமாயிருந்தது.

இச்சரிதைக் கடுத்த காலத்தில், இப்பிரிவினைச் சபையின் முகாந்தரமாய்த் தேசத்தில் எவ்வளவோ பயங்கரத்துக்குரிய குழப்பங்களும் புரளிகளும் இடைக்கிடை நடந்து வந்ததுடன், கொலைபாதகங்களும், கொள்ளைகளும் பெருகிப் போனதால், சக்கரவர்த்திகள் இக்காரியத்தில் தலையிட வேண்டியதாயிற்று. யாராயிருந்தபோதிலும், பகிரங்கமாய் இப்பிரிவினைச் சபையிற் சேர்ந்திருக்கலாகாதென்று கொன்ஸ்தான்தீன் ராயன் ஒரு சட்டம் நிருபித்தான். உடனே அநேக பட்டணவாசிகளும், தகாஸ்தே பட்டணத்தாரும் மெத்தவும் உறுதியும் வைராக்கியமுமான விசுவாசத்தைக் காட்டி, ஒரே மனதாய்ச் சத்தியத் திருச்சபையில் திரும்பச் சேர்ந்தார்கள். சட்டம் நிருபித்தது தான் தாமதம்; தட்சணமே இப்பட்டணத்தார் யாவரும் கத்தோலிக்குத் திருச்சபையைச் சேர்ந்ததைப் பார்த்தால், பிரிவினைக்காருடைய துராக்கிருதக் கொடுமைக்குப் பயந்தே, இவர்கள் சத்திய விசுவாசத்தை வெளிப்படையாய்க் காட்டாமல் இரகசியத்தில் வைத்திருந்ததாகத் தெரியவருகிறது. அர்ச். அலிப்பிதூஸ் என்பவர் சொல்கிறதுபோல், "சில வருஷங்களுக்குப் பிறகு தகாஸ்தே என்னும் பட்டணத்தைவிட, அதிக மனப்பாக்கியம் உடையதும், உரோமான் திருச்சபைக்கு அமைவும், அதனோடு அதிக ஒற்றுமை கொண்டதுமான வேறு-பட்டணம் ஆப்பிரிக்காவிலேயே கிடையாது."

அர்ச். மோனிக்கம்மாளுக்குச் சுமார் 16 வயது நடக்கும்போது, அவள் ஜனன நாடானது மத வைராக்கியத்திற் கடுத்த கொடுமையினின்று விடுவிக்கப்படவே, சர்வ சுதந்தரங்களிலும் மேலான சுதந்தரமாகிய மத சுதந்தரத்தையடைந்தனள். அத்தேசவாசிகள், தங்கள் தப்பறையான போதனைகளை வெறுத்துவிட்டுச் சத்திய திருச்சபையோடு ஐக்கியமாகி வருவதைக் காணும்போது, அவளுடைய இருதயம் இன்பம் நிறைந்த சந்தோஷத்தை யடைந்திருக்குமென்பதற் கையமில்லை. சிலர் நம்புவதுபோல, இப்பாக்கியமான காலத்திலேயே அவள் ஞானஸ்நானம் பெற்றுப் புதுநன்மை வாங்கியிருந்தால், ஆசாபாசக்கட்டுகளை அறுத் தெறிந்து, உலகத்தையும் அதன் அநித்திய சந்தோஷத்தையும் வெறுத்துத் தள்ளி தன் ஜீவியகாலமெல்லாம் கர்த்தர் ஒருவரையே நேசித்து வரவேண்டியதென்னும் உன்னத வீரத்துவமான உணர்ச்சிகள் அவள் இருதயத்தில் பிறந்திருக்கும்.

அர்ச். மோனிக்கம்மாளுக்குச் சுபாவத்திலேயேயிருந்த சற்குணங்கள், காலம்போகப்போக அதிக பிரகாசத்தோடு துலங்கிவந்தன. மாட்சிமை தங்கிய அவளது கூரிய புத்தியைச் சரியாய்க் கண்டுபிடிக்கக்கூடிய அர்ச். அகுஸ்தீன் என்பவர், அவளது புத்திப் பெருமையை நாம் எதிர்ப்பாராத விதமாய், மெத்தவும் மெச்சிப் புகழ்ந்து வாழ்த்துகிறார். தாயைப் மெச்சும் பிள்ளை யென்னும் பழமொழியின்படி, அவள் தன் தாயாரென்பதைப்பற்றி, பட்சத்தின் மிகு

தியால் சத்தியத்தின் வரம்பைக் கடந்து ஒருக்காலும் அப்படிப் புகழ்ந்து பேசியிருக்கமாட்டார். அர்ச். மோனிக்கம்மாள் மெய்யாகவே பூரண மனோசத்தி கொண்டவளென்று அர்ச். அகுஸ்தீன் அநேக இடங்களில் திட்டமாய்ச் சொல்லுகிறார். தத்துவ சாஸ்திரத்திற்கும் வேதத்திற்கும் அடுத்த ஆழ்ந்த விஷயங்களைப்பற்றி நடக்கும் தர்க்கங்களில், அவள் கலந்து சாமர்த்தியத்துடன் பேசுவதையும், அர்ச். அகுஸ்தீன் சொல்லுகிறது போல் "அச்சமயத்தில் யாரோ ஒரு சிறந்த பண்டிதர் தங்கள் மத்தியில் இருப்பதுபோல்" அவரும் அவருடைய சிநேகிதர்களும் உணர்ந்து, அவளைச் சூழ்ந்து அவள் சொல்வதைக் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருப்பதையும் இச்சரித்திரத்தில் போகப்போகப் பார்ப்போம். அர்ச். மோனிக்கம்மாளின் அருமை வாய்ந்த சிறந்த மனோசக்தியானது, அப்போதே தன் சறுசுறுப்பைக் காட்டத் துவக்கிற்று. படிப்பின்மட்டில் ஆரூத ஆவலைக் காட்டினாள். சிறுமியாயிருக்கும் போதே கேள்வி முயல் என்பதற் கிசைய, தன் தோழர்களிடம் ஆடுவதை விட்டுவிட்டு, விசேஷமாய் யாராவது பெரியவர்கள் படித்தவர்களென்றும் விவேகிகளென்றும் தனக்குத் தெரியவந்தால், அப்படிப்பட்டவர்களுடன் சம்பாஷணை செய்து அவர்கள் சொல்வதைக் கவனமாய்க் கேட்பாள்.

(இன்னும் வரும்.)

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்]

மனந்திரும்புதல்.

நெடுங்காலமாய் S. P. G. மிஷனைச் சார்ந்த குடும்பத்திற் பிறந்து ஷை மிஷனில் உத்தியோகம் வகித்துப் பலரை அக்கொள்கையைக் கைப்பற்றச் செய்தவரும், தமிழ் நூல் ஆராய்ச்சியுள்ளவரும், பெங்களூர் St. ஜோசேப்பு காலேஜிலும் கன்னியர் மடத்திலும் இன்னும் பற்பல மிஷன் பள்ளிக்கூடங்களிலும் தமிழ்ப்பண்டிதராக விளங்கி பல மேதாவிகளால் நற்சாக்ஷி பத்திரம்பெற்றவரும், தமிழ் இலக்கண விலக்கிய புலவர் சிங்கமாகிய கனம் Y. C. சபாபதிபிள்ளையவர்கள், பள்ளிக்கூட வாவுகாலத்தை உதக மண்டலத்திற் கழித்துப்போக விஜயஞ் செய்தபோது, அகஸ்மாத்தாய் ஞான வெளிச்சத்தால் புனையப்பட்டுச் சத்திய கத்தோலிக்கு வேதாச்சாரப்படி 1918௵ மேமீ 12௳ ஞாயிறுவாரம், அர்ச். மோக்ஷகிரி மாதாவின் ஆலயத்தில் சங். இராஜரிஷி. C. Biolley சுவாமிகளால் Y. S. ஞானப்பிரகாசம் பிள்ளையென நாமந்தரித்து ஞானஸ்நானம்பெற பாக்கியம்பெற்று, மறுநாள் புதுநன்மை வாங்கினர். இதனைக் கண்ணுறுஞ் சகல கிறீஸ்துவர்களும் இவரின் புதிய நாமத்தை வழங்குவதுமல்லாமல் அவருடைய ஆத்தும சரீரத்துக்கு ஞானத் திடனை யளிக்க சர்வவல்லவராகிய சர்வேசுரனைப் பிரார்த்திக்குமாறுங் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கண்டுகளித்தோன்.

"வேம்பார் அமலோற்பவ ஜூபிலி க்ளப்பும் அதன் முன்னேற்றக் குறைவும்"

இம்மகுடம் புனைந்த நிருபம் கடந்த சஞ்சிகையில் வெளியானதைக்குறித்து 'பரோபகாரப் பரதனைப்' பாராட்டாமலிருக்கக் கூடவில்லை. சங்கங்களாலும், சபைகளாலும், ஒத்துழைப்பாலும் சமூகத்திற்கு நன்மையுண்டென்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் மேற குறிக்கப்பட்டிருக்கும் ஸ்தாபனம் சீர்கெட்டிருப்பதற்குத் தற்சமயம் ஊரிலிருக்கும் ஸ்திதிதான காரணம் என்றாற்போல் ஜாடை காண்பிக்கிறதை யங்கீகரிக்க முடியவில்லை. ஏனெனில், இப்போதையப் பிளவு நேரிடுவதற்குச் சில வருஷங்களுக்கு முன்னதாகவே செல்வாக்குள்ள சிலரின் குறுகிய நோக்கத்தின்பேரில், க்ளப்பின் பொதுநிதி துர்விநியோகஞ் செய்யப்பட்டதுமன்றி உற்சாகமாய்ப், பாடுபட்டவர்களின் மனதையும அதைரியப்படுத்தும் படியான விஷமச் செய்கைகள் செய்யப்பட்டதுமே க்ளப் அலைக்கழிவுக்குக் காரணம்.

ஆதலால், விஷமம் கொண்டவரின் செல்வாக்கு இனிமேலும் அமலோற்பவ நாயகியின் ஜூபிலி க்ளப் விஷயத்தில் பலிக்காதிருக்கும்படியான ஏற்பாட்டைச் செய்து, துர்விநியோகஞ் செய்யப்பட்ட பொருளையும் திரும்பப் பெற்று, க்ளப்பைக் காரியார்த்தமா யுயிர்ப்பிக்கக் கங்கணங்கட்டி வெளிவரும் அங்கத்தினருளரேல் பிரயோஜனமாயிருக்கும்.

இங்ஙனம்,
அங்கத்தினரி லொருவன்.

தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம்.

சங்க விடுதிக்காக வரவு.

தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தாரால் சென்னையில் எற்படுத்தப்படப்போகிற சங்க விடுதிக்காக பின் குறிக்கப்படும் நன்கொடைகள் நன்றியறிதலுடன் வரவேற்றுக் கொள்ளப்படுகின்றன. இத்தொகைகள் சென்ற ஜனவரி மாதத்தில் வசூலிக்கப்பட்டு சங்க நிதியிற் சேர்க்கப்பட்டுவிட்டபோதிலும். லாக்களிக்கப்பட்ட வேறு சில தொகைகளைச் சேர்த்து ஒருமிக்கப் பிரசுரிக்கலாமென்னும் நோக்கத்துடன், இது இதுகாறும் தாமதிக்கப்பட்டது. ஆயினும் கோரினபடி தொகை வசூலாகவில்லை.

		ரூ.	அ.	ப.
	ஏற்கெனவே சங்க விடுதிக்காக வசூலாயுள்ள தொகை	1.672	7	0
1.	ஸ்ரீமான் எம்.ஜே. கர்வாலியோ, வர்த்தகம், மணப்பாடு ...	100	0	0
2.	மெஸர்ஸ் பி. ஜி. கோமஸ் அண்டு கோ. வர்த்தகம், கொழும்பு ..	50	0	0
3.	ஸ்ரீமான் எஸ். ஏ. ஏ. டி. டிமெல், வர்த்தகம், வேம்பார் ...	50	0	0
4.	,, ஜி. கொரெரா, பி. ஏ., வர்த்தகம், தூத்துக்குடி	50	0	0
5.	மெஸர்ஸ் ஜி. எஸ். பெர்நாண்டோ கர்வாலியோ அண்டு கோ, கண்டி	25	0	0
6.	,, பி. ஏ. எஸ். டிமெல் அண்டு கோ, கண்டி ...	25	0	0
7.	,, எம். கொரெரா அண்டு பிரதர்ஸ், கொழும்பு ...	25	0	0
8.	ஸ்ரீமான் எஸ். எம். எப். மேய்ன் ஸ்டிரீட், கொழும்பு ...	25	0	0
9.	,, எஸ். டி. கொரெரா, வர்த்தம், கலித்துறை ...	25	0	0
10.	,, எஸ். எஸ். வாஸ், வர்த்தகம், கண்டி	15	0	0
11.	மெஸர்ஸ் பெர்நாண்டோ விக்டோரியா பிரதர்ஸ், வெள்ளவத்தை, கண்டி ...	10	0	0
12.	ஸ்ரீமான் ஜி. மிஸ்லியர், வர்த்தகம், கண்டி	5	0	0
13.	மெஸர்ஸ் ஜி. கோமஸ் அண்டு பிரதர்ஸ், மர்தானை, கொழும்பு	5	0	0
14.	மெஸர்ஸ் எஸ். டி. அல்வாரெஸ் அண்டு கோ. கலித்துறை	5	0	0
15.	ஸ்ரீமான் விக்டர் பெர்நாண்டோ பி. ஏ., கலித்துறை ...	5	0	0
16.	கத்தோலிக்கு யௌவனர், மர்தானை, கொழும்பு ...	5	0	0
17.	மெஸர்ஸ் நிக்கோலாஸ் பெர்நாண்டோ அண்டு பிரதர்ஸ், கண்டி	5	0	0
18.	ஸ்ரீமான் சி. எம். டிமெல், வர்த்தகம், கண்டி	5	0	0
19.	மெஸர்ஸ் எஸ். கே. ஏ. பாய்வ அண்டு பெர்நாண்டோ, கண்டி	3	0	0
20.	ஸ்ரீமான் ஜோசப் எல். மோத்தா, வர்த்தகம், தூத்துக்குடி	3	0	0
21.	,, குசை பூரணம் பெர்நாண்டோ, பழைய காயல்	2	8	0
22.	,, பி. எம். சோரிஸ், வர்த்தகம், தூத்துக்குடி ...	2	0	0
23.	மெஸர்ஸ் ஜோஸ் பெர்நாண்டோ அண்டு பிரதர்ஸ், கலித்துறை	2	0	0
24.	மெஸர்ஸ் பீட்டர் அண்டு மைக்கல்லா ரோச்சு	0	8	0
	ஆ மொத்தம் ...	2,120	7	0

எம். பி. குழந்தைசாமி,
உதவி காரியதரிசி,
தெ. இ. க. இந்தியர் சங்கம்.

சென்னை,
20—5—18.

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாச்சாரம்.

திருச்சபை சட்டம்.—இச்சட்டம் புதுப்பிக்கப்பெற்ற தென்பதை நமது சந்தாதாரர்கள் அறிவார்கள். இவ்வாறாக புதுப்பிக்கப்பெற்ற ஷெ சட்டம் சென்ற மாதம் 19-ம் வ இஸ்பிரீத்துசாந்து திருநாளன்று அமுலுக்கு வரலாயிற்று. சில வருடங்களாய்ப் பக்தித் திருநாளாக அநுசரிக்கப்பட்டுவந்த திவ்யநற்கருணை திருநாள் இனிமேல் இச்சட்டத்தினபடி முன் போலவே கடன் திருநாளாக அநுசரிக்கப்படும்.

கொலையும் கொள்ளையும்.—டாக்டர் வேலை செய்துவந்த ஒரு ஸ்திரீ சென்ற மாதத்தில் அறுநூறு ரூபாயுடன் ரயில் ஏறிப்போகும்போது கொலை செய்யப்பட்டாள். அவளுக்குத் துணையாகப் போன வேலைக்காரனும் 600 ரூபாயும் போன போக்குத் தெரியவில்லை.

ஜேர்மனி.—நிகழும் யுத்தத்தின் பலனாக இத்தேசத்து ஜனங்களுக்குள் அதிருப்தி யுண்டாகியும், அன்னியோன்னியங் கெட்டும் ஓர்விதக் குழப்பம் உண்டாயிருக்கிறதென்றும், இவர்களுடைய சக்கரவர்த்திக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது.

திருச்சபையின் விருத்தி.—ருஷியாவிலுள்ள யூக்றேன் மாகாணத்திலிருக்கும் பிரிவினைக்காரருக்குள் பெரும் பங்கானோர் கத்தோலிக்கு வேதத்திற் சேர்ந்துவருகிறபடியால் பலபுதுக்கோவில்கள் கட்டப்பட வேண்டியதாயிருக்கிறது. பள்ளிக்கூடங்களிலும் மனந் திரும்பினவர்களுக்கு ஞானோபதேசம் சொல்லப்பட்டு வருகிறது.

ஜேர்மனியருடைய நிஷ்ரேம்—தங்களுடைய முழுகு கப்பல்களினாலும் ஆகாய விமானங்களினாலும் 14,120 ஆங்கிலேயரை ஜெர்மனியர் சாகடித்திருக்கிறார்களென்று சொல்லப்படுகிறது. இத்தனை பேரும் யுத்தஞ்செய்யாத ஸ்திரீ புருஷர், சிறுவர் சிறுமிகள், பிரயாணிகள் முதலியவர்களாவர். இப்பேர்ப்பட்டவர்களை சாகடிப்பது எப்பேர்ப்பட்ட நிஷ்ரேச்செய்கை!

ஓர் நல்ல உதாரணம்.—தற்போது நடந்துவரும் யுத்தம் தொடங்கினது முதற்கொண்டு இங்கிலாண்டிலும் அமெரிக்காவிலும் புரோடஸ்டாண்டு மதத்தார் தங்கள் மத வைராக்கியத்தை கைநெகிழவிட்டு, நாளுக்கு நாள் கத்தோலிக்கு வேதத்தை அதிகமாய்க் கைக்கொண்டு வருகிறார்கள். தின்மையிலிருந்து நன்மை உண்டாகு மென்பதற்கு இதோர் நல்ல உதாரணமன்றோ?

பகல்நேரத்தில் கோவில்களில் கோள்ளைபோதல்—முனிச் பட்டணத்திலுள்ள கோவில்களில் பகல்நேரத்தில் மெழுகுவர்த்தி, பட்டு முதலிய பொருள்கள் திருட்டுப்போவதைப்பற்றி, தேவாராதனை நேரந் தவிர மற்றநேரத்தில் அப்பட்டணத்திலுள்ள கோவில்களெல்லாம் பூட்டப்பட வேண்டுமென்று அப்பட்டணத்து அதிமேற்றிராணியார் உத்தரவளித்திருக்கிறார்.

பாப்பரசரும் ஆஸ்டிரியா தேசத்தரசரும்.—நமது பரிசுத்ததந்தை 15-ம் ஆசிர்வாதப்பர் ஆஸ்டிரிய தேசத்தரசருக்குக் கடிதமெழுதி கைதியாக்கப்பட்டிருக்கும் காசவியாதியுள்ள இத்தாலியா போர்வீரர்களனைவரையும் அவர்களுடைய தேசத்துக்கு அனுப்பிவிட உத்தரவளிக்கவேண்டுமென்றுகேட்டுக்கொள்ள, அரசரும் அதற்கிணங்கி, ஷெ போர்வீரர்களை விடுதலை செய்தார். அவர்களெல்லோரும் கூட்டங் கூட்டமாய் இத்தாலியா தேசத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

துருக்கருடைய தேவதுரோக செய்கைகள்.—ஜெருசலேம் பட்டணம் ஆங்கிலேயருடைய வசமாவதற்கு முந்தியே, திருயாத்திரையாய்ப் போகிறவர்கள் 400 பேர் வரையிலும் சாவகாசமாய்த் தங்கியிருந்து சவரட்சணை பெற்றுவரும் "காசா னோலர்" என்னும் ஓர் பெரிய தரும சாலையை துருக்கர் கொள்ளையாடி, அவ்விடத்தில் இருந்த $1\frac{1}{2}$ இலட்சம் ரூ. பெறுமான சாமான்களை அபகரித்துக்கொண்டதுமல்லாமல், திரு நகரிலிருந்த தேவாலயங்களையும், கன்னியர், சந்நியாசிகள் மடங்களையுங் கொள்ளையாடினார்களாம்.

ஓர் பிரமாண்டமான மணி.—ஜெர்மன் தேசத்தில் கொலோஸ் என்னும் நகரிலுள்ள மேற்றிராசனக் கோவில் உலகிலுள்ள கோவில்களிற் சிறந்தது. இதன் கோபுரங்களில் அநேக மணிகள் தொங்குகின்றன. இவைகளுக்குள் பிரமாண்டமான மணி 56,000 பவுண் நிறையுள்ளது. இதற் கிடப்பட்டிருக்கிற நாமம் "மகிமை தங்கிய மரியாயி." இன்பந்தரும் அதன் நாதம் வர்ணிப்புக்கு மிஞ்சினது. இது 1870-ம் ஆண்டில் பிராஞ்சுக்காரருக்கும் புருஷியருக்கும் நடந்த யுத்தத்தில் பிராஞ்சியரிடமிருந்து பிடிபட்ட பீரங்கிகளாற் செய்யப்பட்டது. தற்போது இந்த மணியை வெடிகுண்டுகள் செய்வதற்காக ஜெர்மன்தேசத்து சர்க்கார் அபகரித்துக் கொண்டார்கள். இந்தப் பிரமாண்டமான மணியை கிழே இறக்கையில் கோவில் கட்டடத்துக்குபழுதுண்டாகுமென்று அஞ்சி,

அதைத் துண்டுதுண்டாய் உடைத்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்களாம்.

ஓர் மேற்றிராணியார் வீட்டில் திருடர்கள்.—மி. ச. கியேர் மேற்றிராணியார் அவர்கள் ஓர் நாள் இராத்திரி தம்முடைய வீட்டில் நித்திரை செய்துகொண்டிருக்கையில் ஏதோ ஒரு சந்தடியைக்கேட்டு அதென்னவென்று எழுந்து பார்த்தபோது, ஒரு அறையில் ஆயுதபாணிகளான இரு திருடர் திருடிக்கொண்டிருக்கக் கண்டார். திருடர்களில் ஒருவன் அவரைக் கண்ட மாத்திரத்தில் தப்பித்துக்கொண்டு ஓட்டம் பிடித்தான்; மற்றவனே மேற்றிராணியாரால் பிடித்துக்கொள்ளப்பட்டான். ஆயினும் அவன் தன் கையில் வைத்திருந்த துப்பாக்கியால் அவரைச் சுட்டுவிட்டு ஓடிப்போய் தப்பித்துக்கொண்டான் பிறகு சிறிது காலத்துக்கெல்லாம் அவன் மாத்திரமல்ல அவனுடைய கூட்டாளியாகிய மற்றொருவனும் பிடிபட்டான். தேவாதீனமாய் மேற்றிராணியாருக்குக் காயமொன்றும் படவில்லை.

என்சன் பிஷப்.—இவரை "நல்லாயன்" சந்தாதாரர்கள் அறியாதவர்களல்ல. இவர் பிஷப்பானது முதற்கொண்டு ஆங்கிலிக்கன் புரோடஸ்டாண்டு மதத்துக்குக் கெடுதியும், கத்தோலிக்கு வேதத்துக்கு நன்மையுமுண்டாகி வருகிறது. அதெப்படியெனில், நமதாண்டவருடைய தெய்வீகத்தை மறுத்த ஒரு மனிதனை அப்போஸ்தலர்களின் ஸ்தானத்தில் ஸ்தாபித்த வேதம் மெய்யான வேதமாகாதென்று பிரசித்தமாய்ச் சொல்லி, அநேக புரோடஸ்டண்டார் அம்மதத்தை விட்டுவிட்டு, நமது சத்திய கத்தோலிக்கு வேதத்திற் சேர்ந்து வருவதினாலேயாம். பாதிரிமார்களுக்குள்ளும் மூன்றுபேர் தாங்கள் பெற்றுவந்த பாரி சம்பளத்தை முதலாய்ச் சட்டைசெய்யாமல், தங்கள் மதம் அபத்த மதமென்று கண்டுபிடித்து, சத்தியவேதத்திற் சேர்ந்துகொண்டார்கள். இன்னும் நல்ல மனசாட்சியுள்ள புரோடஸ்டண்டார் பலர் திருச்சபையிற்சேர்வார்களென்பதுண்மை. கர்த்தர் ஸ்தாபித்த சபை ஒன்றேயொன்று. அது அர்ச். இராயப்பர்மேல் ஸ்தாபிக்கப்பெற்ற சபை; அதில்மாத்திரம் இரட்சண்யமுண்டு. அதனுடன் மாத்திரம் நமது கர்த்தர் உலக முடிவுபரியந்த மிருப்பார்; நரக வாசல் அதை மேற்கொள்ளாது. ஆகையால் இரட்சண்யமடைய மெய்யான ஆசையுள்ளவர்களனைவரும் அந்த மெய்யான சபையிற்சேர்ந்து அதற்குக் கீழ்ப்படிந்து நடந்தாலன்றி மற்றப்படி இரட்சண்யமடையமாட்டார்களென்பது சத்தியம்.

ஜேர்மன் சக்கரவர்த்தியின் அநீதம்—தேவாலயங்களின்மேல் வெடிகுண்டுகளை யெறிந்து அவைகளை யிடித்துத் தகர்ப்பது அநியாயமென்றும், அப்பேர்ப்பட்ட அநீதம் இனி செய்யப்படாதென்றும் சொல்லி நமது பரிசுத்த தந்தை 15-ம் ஆசீர்வாதப்பர் ஆஸ்டிரிய தேச சக்கரவர்த்திக்கு எழுதினார். சக்கரவர்த்தியும் இனி இப்பேர்ப்பட்டது யாதொன்றும் நடவாதென்று உறுதிமொழி கொடுத்தார். ஆயினும் தேவாலயங்களின்மேல் வெடிகுண்டுகள் விழுவது நின்றபாடில்லை. ஆஸ்டிரியர்களும் தாங்கள் வெடிகுண்டுகளை எறியவில்லையென்று சாதித்தார்கள். கடைசியாய் சென்ற மாதத்தில் ஓர் ஆகாய விமானம் இத்தாலியரால் சுடப்பட்டு கீழே விழத்தாட்டப்பட்டபோது அதிலிருந்து அதை நடத்தினவன் ஒரு ஜெர்மன் கப்பித்தானென்று தெரியவந்தது. உடனே இதை ஜெர்மன் சக்கரவர்த்திக்கு அறிக்கையிட்டபோது, அவர் இப்பேர்ப்பட்ட அநீதச் செய்கையைத் தடுக்க ஏதாவது தாக்கீது செய்வதற்குப் பதிலாய் தேவாலயங்களை வெடிகுண்டால் இடித்துத் தகர்க்கும்படியாகவே படைத்தலைவர்களுக்கு ஆக்கியாபித்தாராம். ஆ! இது என்ன அநியாயம்!!

பிராஞ்சு தேசம்.—இத்தேசத்துக்கும் பாப்பானவருக்கும் பூர்வந்தொட்டிருந்து வந்த இராஜாங்க சம்பந்தமான பொருத்தம் சில வருடங்களாக ரத்தாயிருக்கிறதென்றும், மறுபடியும் அப்பொருத்தத்தைப் புதுப்பிக்க சில தனவான்கள் முயற்சியெடுத்துக்கொண்டு தங்கள் தேசத்துப் பெரிய மந்திரிக்கு இவ்விஷயமாய் ஓர் அர்ஜி செய்துகொள்ள, ஜனங்களிடமிருந்து கையொப்பங்கள் வாங்கிவருகிறார்களென்றும் நண்பர்கள் அறிவார்கள். இதற்காக கையொப்பமிடுகிறவர்கள் கத்தோலிக்கர் மாத்திரமல்ல, ஆனால் புரோட்டஸ்டண்டார், யூதர், நாஸ்திகர் ஆகிய

இவர்களெல்லோரும் பூரண மனதுடன் கையொப்பமிட்டு வருகிறார்கள். இக்கையொப்பங்கள் நாளொன்றுக்கு ஆயிரக் கணக்காய் வந்துகொண்டிருக்கின்றனவாம். ஒருகாலத்தில் கத்தோலிக்கு வேதத்தின் ஒரு பெரும் சத்துருவாயிருந்த இத்தேசத்தின் பெரிய மந்திரியும் நிகழும் கொடிய யுத்தத்தில் சன்னியாசிகள், கன்னியாஸ்திரிகள், குருக்கள் முதலியோர் பிராஞ்சுதேசத்தின்மீது கொண்டிருக்கும் நல்ல அபிமானத்தையும், அவர்கள் யுத்தத்தின் நிமித்தம் படும் இக்கட்டு இடுக்கண்களையும் கண்டு தமக்குக் கத்தோலிக்கு வேதத்தின்மட்டிலிருந்த வெறுப்பையுங் கோபத்தையும் விட்டுவிட்டு, அதன்மட்டில் நல்ல எண்ணங் கொண்டிருப்பதாக அவர் செய்யும் உபந்நியாசங்கள் வழியாய்த் தெரிய வருகிறது. ஆகையால் கத்தோலிக்குக் கனதனவான்கள் திருச்சபைக்காகத் தங்கள் தேசத்தில் எடுத்துவரும் பிரயாசைகள் வீண்போகாமல் முன்போல அத்தேசத்துக்கும் பாப்பானவருக்கும் இராஜாங்க விஷயமாய் ஏற்பட்டிருந்த பொருத்தம் மறுபடியும் ஏற்படுமென்று நம்ப இடமுண்டாயிருக்கிறது.

பிள்ளையார் சரித்திர ஆராய்ச்சி.—யென்ற ஓர் துண்டு புத்தகம் எமது பார்வைக்கு எட்டியது. இதனை யெழுதின யாழ்ப்பாணத்து சங். S. ஞானப்பிரகாச சுவாமிகள் அப்புத்தக முகவுரையில் தெரிவித்துக் கொண்டதுபோல், இந்துக்களுக்கு மனத்தாங்கலை யுண்டுபண்ணக் கூடிய எவ்வித வார்த்தையையும் தாமாக ஒன்றுங்கூட்டி யெழுதாமல், பிள்ளையார் சரித்திர விஷயத்தில் இந்துக்களின் வெவ்வேறு புராணங்களில் சொல்லியிருப்பனவற்றையே. வெளிப்படையா யெடுத்துக் காட்டிப் பிள்ளையார் வணக்கமானது மிருக வணக்கமே யொழிய தெய்வ வணக்கமல்லவென்று மெய்ப்பித்து விளக்கியிருக்கிறார். அல்லாமலும், இந்துக்களுடைய பூர்வோத்திரமான நாலு வேதங்களிலும் பிள்ளையார் அல்லது விக்னேஸ்வரன் என்ற நாமதேயமே காணப்படவில்லை யென்றும், வடதேயத்தினின்று வந்து தென்தேயத்தில் குடியேறின ஆரியர் தாங்கள் தென்னாட்டிலிருந்த ஜனங்களோடு பாஷையிலும், நடையுடை பாவனையிலும், கொள்வனை கொடுப்பனையிலும் எவ்வாறு ஒன்று சேர்ந்து தங்களை மேன்மைப் படுத்திக் கொண்டார்களோ, அவ்வாறே தாங்கள் அதுவரை வழிப்பட்டுவந்த பிர்மா, விஷ்ணு, சிவன் ஆகிற தங்கள் தேவர்களை மேன்மைப்படுத்தும்படியாகவும், தென்னாட்டுத் தேவர்களோடு அவர்களைச் சமரசப் படுத்தும்படியாகவும், தங்களுடைய வட நாட்டுச் சாமிகளுக்குத் தென்னாட்டு சாமிகளைப் பிள்ளைகளாகவும், மனைவிகளாகவும், வாகனங்களாகவுங் காட்டும் கற்பனைக் கதைகளைப் புராண காவியங்களாகக் கட்டிவிட்டார்கள் என்றும், அக்காலத்திலிருந்தே பிள்ளையார் ஆகிற தென்தேயத்து சாமி சிவன் ஆகிற வடதேயத்து சாமிக்கு மூத்தமகன் என்றகதை வழங்கத்தொடங்கிற்றென்றும் அவர் எடுத்துக் காட்டுவதுமன்றி, வேண்டிய ஆதாரங்களைக் கொண்டும் நியாயங்களைக்கொண்டும் பிள்ளையார் யானைக்குச்செய்கிறவணக்கம் மிருக வணக்கமே யன்றி அது ஒருபோதுந் தெய்வ வணக்கமாக மாட்டாதென்றும் மெய்ப்பித்திருக்கிறார். இவ்வரிய துண்டு புத்தகம் வேண்டுவோர் யாழ்ப்பாணம் அர்ச். சூசையப்பர் அச்சுக்கூடத்தின் அதிபருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

மி. ச. மேட்லிகாட் ஆண்டவரின் தேகவியோகம்.—இவர் கல்கத்தாவைச் சேர்ந்த சிறந்ததோர் ஆங்கிலோ இந்தியர் குடும்பத்தில் ஜனனமானவர். தேவப்பணிவிடையில் தமது சீவிய நாட்களைச் செலவழிக்க அவா கொண்டவராய்க் குருப்பட்டத்துக்காகப் படிக்க ரோமாபுரிக்குச் சென்று அவ்விடத்தில் தர்க்க சாஸ்திரத்தையும் வேத சாஸ்திரத்தையும் ஐயந்திரிபறப் படித்து, 1861-ம் ௵ குருப்பட்டம் பெற்றார். பிறகு கல்கத்தாவுக்குத் திரும்பிவந்து அவ்விடத்திய மேற்றிராசனக்கோவிலில் ஆத்துமங்களின் இரட்சண்யத்துக்காக மிக்க ஊக்கத்துடன் உழைத்துவந்தார். 1896-ம் ௵ திருச்சூருக்கு முதல்மேற்றிராணியாராக தெரிந்து கொள்ளப்பட்டு, அவ்விடத்தில் 8-வருஷ காலமாய்ப் பல சீர்திருத்தங்களைச் செய்வதிலும் கல்வி அபிவிர்த்திக்காக பாடசாலைகளை ஸ்தாபிப்பதிலும் அலுவலாயிருந்த பின்னர், இங்கிலாண்டுக்குச்சென்று மி. வ. கர்தினால்வான் ஆண்டவருக்கு உதவிமேற்றிராணியாராக விருந்து, அவருடைய மா

ணத்துக்குப் பிறகு திரும்பவும் கல்கத்தா வந்தடைந்தார். தம்முடைய தள்ளாத பிராயத்தை முன்னிட்டு யாதோர் அலுவலையுஞ் செய்யக்கூடாதவரா யிருக்கையில், இவருக்கு தேக ஆரோக்கியங் குறைவுபடவே, பெங்களூரிலுள்ள "மார்த்தா" வைத்தியசாலைக்குச் சென்று, அவ்விடத்தில் தம்முடைய 87-ம் பிராயத்தில் பாக்கியமான மரணத்தை யடைந்தார். இவருடைய ஆத்துமம் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவதாக. இந்த நல்ல மேற்றிராணியார் அப்போஸ்தலரான அர்ச். தோமையார் இந்து தேசத்துக்கு வந்து வேதம் போதித்ததைப்பற்றியும், மைலாப்பூரில் அவர் வேதசாட்சியாக மரணமடைந்ததைப் பற்றியும் அநேக அத்தாட்சிகளை ஆதாரமாகக் கொண்டு "இந்தியாவும் அப்போஸ்தலரான தோமையாரும்" எனும் பெயர்பூண்ட அருமையான பிரபந்த மொன்றை எழுதியுள்ளார். இதை எழுதிமுடிக்க இவருக்கு 10-வருஷம் பிடித்ததென்று சொல்லப்படுகிறது.

டேல்லிமாநகரில் ஓர் சங்கம்—இங்கிலாந்து தேசத்துக்குப் பெரிய மந்திரியானவர், நமது வைசிராய் அவர்களுக்குக் கடிதமெழுதி, நிகழும் யுத்தகாலத்தில் இந்தியாவுக்கு யாதோர் பொல்லாப்பும் நேராமல் அதைப் பாதுகாக்கும்படி, ஏற்ற பிரயத்தனங்களைச் செய்ய அதன் கனதனவான்களை ஒரு சங்கமாய்க்கூட்டி, ஆலோசனை செய்வது நலமாயிருக்குமென்று அறிவித்ததின்பேரில், வைசிராய் அவர்களும் ஓர் சங்கங்கூட்டினர். அச்சங்கத்தில் இந்தியாவின் பாதுகாப்புக்காக ஓர் பெரிய படையைச்சேர்க்க முயற்சிகள் செய்யவேண்டுமென்றும், அதற்காக அதன் பிரஜைகள் முன்னுக்குவந்து ஆள் விஷயமாயும் பொருள் விஷயமாயும் உதவிபுரிய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. மதபேதம், ஜாதிபேதம் பாராட்டாமல் சகலரையும் சமரசமாய்க் கண்காணித்து வருங் காருண்ய ஆங்கிலேய அரசாட்சியின்கீழ் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களான நாமெல்லோரு மிருக்கும் வரையிலும், நம்முடைய சத்தியவேதத்துக்காவது அல்லது நம்முடைய முன்னேற்றத்துக்காவது யாதோர் இடறல் அல்லது இடைஞ்சல் உண்டாகாதென்பது நாம் ஒவ்வொருவரும் நம்முடைய அநுபோக சித்தியிலறிந்த விஷயமாதலால், நாம் எக்காலமும் அவர்களுடைய அரசாட்சியின் கீழிருந்து, இனிது வாழும்படி தேசத்தின் பாதுகாப்புக்காக இப்போது முன்வருவோமாக. நமக்குள் அனேகர் தேச பாதுகாப்புச் சேனையிற் சேர்வதுடன், நமக்குளுள்ள கனதனவான்கள் பொருளுதவியுஞ் செய்து கைகொடுப்பார்களாக. டெல்லியிற் கூடின ஷை சங்கத்தின் விஷயமாய்ச் சென்னையிலும், கவர்னர் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் ஓர் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. இதிலும் அநேக இந்நியர்கள் படையிற் சேரவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இப்படிச் சேரும் பேர்வீரர்களுக்கு அளிக்கப்படும் சன்மானங்களாவன:—தர்காஸ்து நிலங்களை ஜாரிசெய்யும் விஷயத்தில் கவர்ன்மெண்டார் இப்போர் வீரர்களுக்கு முதன்மையான ஹக்குகொடுக்க கவனிப்பார்களென்றும், யுத்தத்தில் வீரியத்தோடு போர்புரிந்து கியாதி பெறுவோர்களுக்காக 2,50,000 ஏக்கிரா நிலம் சித்தப்படுத்தப்பட் டிருக்கின்றதென்றும், யுத்த முடிவானபின் 15 ரூ. அல்லது அதற்குக் குறைவான சம்பளமுள்ள பல சிவில் உத்தியோகங்களெல்லாம் காலியாகும்போது அவரவர்களுடைய திறமைப்படி இவர்களுக்கு கொடுக்கப்படுமென்றும், இவர்களுடைய பிள்ளைகளுக்கு ஆரம்ப படிப்பு இலவசமாய்க் கற்பிக்கப்படுமென்றும், உயர்தரப் படிப்புக்கு லாயக்கான இவர்களுடைய பிள்ளைகள் அரைச் சம்பளத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படுவார்களென்றும், இத்தகைய இன்னுமபல சன்மானங்களுமேயாம். டெல்லியிற் கூடின சங்கத்தின் தீர்மானங்களுக் கிணங்கி, கப்பூர்த்தாலா மகாராஜா அவர்கள், தம் நாட்டிற்கிடைக்கும் சகல ஆதாயங்களையுங் கொடுத்துவிடத் தயாரா யிருப்பதாகவும், பாரிட்காட் மகாராஜா அவர்கள் ஒரு இலட்சம் ரூ. கொடுப்பதாகவும், நைசாம் அவர்கள் பதினைந்து இலட்சம் ரூ. கொடுப்பதாகவும் வாக்களித் திருக்கிறதாகத் தெரியவருகிறது.

பரதன்.—இலங்கைக்குத் திலகம் போன்ற கொழும்பு மாநகரத்தில் மிக்க சித்தியுடன் நடைபெறும் பரதகுல சங்கத்தவரால் வருஷத்திலிருமுறைப் பிர

சுரிக்கப்படாநின்ற "பரதன்" என்னும் பத்திரிகையின் நான்காவது மலரை வந்தனத்துடன் வரப்பெற்றோம். கற்றோரு மற்றோரும் எளிதில் உணருமாறு தெள்ளிய நடையில் எழுதப்படு மிப்பத்திரிகை இம்முறையும் பிரயோசனமான பற்பல விஷயங்களைக்கொண்டு வெளிப்போந்துளது. ஷை சங்கமும், பத்திரிகையும் செய்யுந் தொழில்களை நோக்கின், அவை யிரண்டும் தக்க திறமைசாலிகளால் நடத்தப்பட்டு வருகின்றன வென்று தெற்றன விளங்குகின்றது. 'பரதன் போதிப்பதென்ன,' 'இரண்டு படங்கள்,' 'கடமை' முதலிய வியாசங்கள் பரதர்களால் பலகாலும்படிக்கப் படத்தக்கவை. பரதருடைய கல்விக்காக ஷை சங்கம் பெருமுயற்சி யெடுத்து வருகின்றது. இத்தகைய பொதுநல முயற்சிகளில் ஸ்ரீமான். J. X. பெரெரா அவர்கள் பெரிதும் ஊக்கங்கொண்டு உழைத்து வருகிறதாகத் தெரியவருகிறது. இந்தச் சுயப்பரித்தியாகப் பொதுநலப்பிரியரையும், அவருடைய நன்னோக்கங்களையும் கடவுள் ஆசீர்வதிப்பாராக.

ரெட்மண்ட் பிரபுவின் சாச்சடங்கு.—உலகமெங்கும் பிரக்யாதி பெற்று உத்தம கிறீஸ்துவராயொழுகி, தம்தேசத்தாரான ஐரிஷ்காரருடைய நன்மைக்காக மகா பிரயாசையுடன் உழைத்துவந்த ஜான் ரெட்மெண்ட்பிரபு மரணமானதைப்பற்றிக் கேள்விப்பட்ட ஐரிஷ்காரரும், இந்தத் தேசத்தின் உத்தம கிறீஸ்துவர்கள்மட்டில் அனுதாபங்கொண்டுள்ள சகலரும் மகா துக்கத்துக்குள்ளானார்களென்பது சகஜம். இவருடைய பிரேத மடங்கிய பெட்டி லண்டனிலுள்ள பிரமாண்டமான மேற்றிராசன தேவாலயத்துக்குக் கொண்டுபோகப்பட்டு அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக திவ்ய பூசைப்பலி செய்து ஒப்புக்கொடுக்கப்பட்ட வரலாற்றைப்பற்றியும், அச்சமயத்தில்இம்மகானைகனப்படுத்தும்பொருட்டு அவ்வாலயத்துக்கு இராஜப் பிரதிநிதிகள், பிரபுகள், வங்கிஷாதிபதிகள், உத்தியோகஸ்தர்கள் ஆகிய இவர்களெல்லோரும்விஜயஞ் செய்திருந்ததைப்பற்றியும் சென்ற ஏப்ரல்மாதப் பத்திரிகையில செப்பியுள்ளோம். இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக திருச்சடங்குகள் ஷை ஆலயத்தில் நிறைவேறின. அன்று சாயந்தரம், சவப்பெட்டி ஒரு ஸ்பெஷல் புகைவண்டித் தொடரில் ஸ்தாபிக்கப்படவே, அதில் அவருடைய பந்துக்களும் ஸ்நேகிதர்களும் ஏறினார்கள். வண்டித்தொடர் ஸ்டேஷனை விட்டுப்புறப்படத் தயாராகையில், அங்குசமுத்திரம்போல் கூடியிருந்தவர்கள் துக்கத்தின் குறிப்பாக தங்கள் தொப்பிகளைச் சிரசினின்று கழற்ற, கிறீஸ்துவர்கள் 53-மணி ஜெபமாலையை ஆரம்பிக்க, வண்டி புறப்பட்டது. வண்டி நின்ற பிரதி ஷ்டேஷனிலும் திரளான ஜனங்கள்கூடி இறந்தவருடைய ஆத்துமத்துக்காக ஜெபங்களை ஒப்புக்கொடுத்தார்கள். பிறகு கப்பல் மூலமாயும் புகைவண்டி மூலமாயும் சவப்பெட்டி அயர்லாண்டுக்குக் கொண்டுபோகப்பட்டு, அவருடைய ஜன்மப் பட்டணத்தி லிறக்கப்பட்டது. அந்தப்பட்டணத்திலுள்ள வீடுகளிலும் ஷாப்புகளிலும் துக்கதுக் கடையாளமாக கருப்பு வஸ்திரந்தொங்க, கத்தோலிக்கருடையவும் புரோடஸ்டாண்டாருடையவும் கோவில்களில் சாவுமணி தொனிக்க, சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் முனிசிப்பல் மெம்பர்களும், இன்னும் மனேக சங்க அங்கத்தாரும் பிரேதபெட்டியை, சங்கை, மரியாதை, துக்கத்துடன் வரப்பெற்று, குருக்களால் செய்யவேண்டிய சடங்காசாரங்கள் செய்யப்பட்டு முடிவானபின் துக்கப் பிரலாபத்துடன் எல்லோரும கண்ணீர் சிந்த, தங்களுக்காக சிரத்தையுடன் கஷ்டப்பட்டுழைதத தங்கள் தலைவரான ஜான ரெட்மன்ட் பிரபுவை நல்லடக்கஞ் செய்தார்கள். நல்ல கத்தோலிக்கு கிறீஸ்துவ தேசத்தின் உத்தமரான இந்தப் பிரபுவின் ஆதத்தும இளைபபாற்றிக்காக நாமும் வேண்டிக்கொள்வோமாக.

சென்னையில் சேசுசபைக் குருக்கள்.—திருச்சினப்பள்ளி அர்ச். சூசையப்பர் சர்வகலாசாலை சேசுசபைக் குருக்கள் சென்னை அதிமேற்றிராசனத்தில் உயர்தரக் கல்வி கொடுக்கும்பொருட்டு, அர்ச். கபிரியேல் செக்கண்டரி பாடசாலையின் கண்காணிப்பை ஒப்புக்கொள்ளப் போகிறார்களென்று தெரியவருகிறது.

கோயமுத்தூருக்கடுத்த பிலியகுளத்தில் அர்ச். அந்தோனியார் கோவில் திருநாள்.—நிகழும் காளயுக்தி வருஷம், ஆனி மாதம் 3-ந் தேதிக்குச் சரியான 1918-ம் வருஷம்

ஜூன் மாதம் 16-ந்தேதி ஞாயிற்றுக் கிழமை, கோயமுத்தூருக் கடுத்த புலிய குளத்தில், பதுவைப் பதியரான அர்ச். அந்தோனியார் திருநாள் வழக்கம்போல் சிறப்புடன் கொண்டாடப்படும். காலை 8-மணிக்கு திவ்ய பலிபூசையும், சாயந்திரம் 8-மணிக்கு தேர்சுற்றுப்பிரகாரம் ஆசீர்வாதத்துடனும் முடிவுபெறும். திருநாளுக்கு முந்தின வெள்ளி, சனிக்கிழமைகளில், காலை 7-மணிக்கு திவ்ய பூசையும் சாயந்திரம் 7-மணிக்கு வழக்கம்போல்தேர்சுற்றுப் பிரகாரமும் நடந்தேறும்.

எம். எஸ். மிக்கேல்,
பங்குசுவாமியார்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-ரூபாயும், முழுக்கலத்துக்கு 4-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

நன்மரண அறிக்கை.

சென்னை.

"மரித்தவர்களுக்காக வேண்டிக்கொள்வது பரிசுத்தமும் பிரயோசனமுமுள்ள எண்ணம்"
(11 மக்காபே. 12, 46.)

சென்னை கத்தோலிக்கு இந்திய பரோபகார சபையின் எக்ஸிக்கூட்டிவ் மெம்பர், சென்னை ஜார்ஜ்டவுன் தர்மீகர் நாகை அ. பி. சீமோன் பிள்ளை குமாரன், மைக்கல் தனது 16-வது வயதாகிய நிகழும் 1918-ம் வருடம் எப்ரல்மீ 9-ந் தேதி மரணமடைந்ததை முன்னிட்டு, எப்ரல்மீ 23-ந் தேதி சென்னை பிராட்வே. அர்ச். சவேரியார் கோவிலில் சங். பிர்ட்ரிக் கோப்பர் டாட் சுவாமியாரவர்களால் ஒப்பீஸ் பெரியபாட்டு பூசை செய்யப்பட்டதோடு அன்றிரவு சென்னை ஜனரல் போஸ்டாபீஸ் டிப்டி போஸ்ட்மாஸ்டரும் ஷை சபையின் தலைவருமாகிய ஸ்ரீமான். ம. இரா. மகிமைதாஸ் பிள்ளையவர்கள் அக்கிராசனத்தின்கீழ் பல வித்துவ சிரோமணிகளால் பற்பல பாக்களடங்கியதும் M. & S. M. Ry., சென்ட்ரல்ஸ்டேஷன் R.R. மானேஜரும், மரித்த S. மைக்கல்பிள்ளையின் பெரிய தந்தையுமாகிய ஸ்ரீமான். ஞானதிக்கம் டேவிட்பிள்ளை யவர்கள் சுபுத்திரன் கனம் அருமைதாஸ்பிள்ளை மருகர் கனம். சாமிதாஸ் ஐசிக்பிள்ளை யவர்களாலும் பிரசுரஞ் செய்யப்பட்ட வியோகப்பாசரம் எனும் செயுள்களின் மீது உபந்நியாசங்களடங்கி ஜெப முடிவில் சபைகலைந்தது. ஒரு பர., பிரி., திரி.

மரித்த மைக்கலின் மைத்துனன்.

A. ஆன்ட்ரூஸ்வந்தனம்.

R. I. P.

சென்னை.

தென்னிந்தியா ரயில்வே ரிடயர்ட் கார்டும், எனது தகப்பனுருமாகிய அ. ஜான்பிள்ளை அவர்கள் நீர் வியாதியினுல் பீடிக்கப்பட்டு கடைசி தேவத்திரவியானுமானங்களைச் சரிவரப் பெற்று, சென்ற எப்பிரல் மாதம் 26-ம் தேதி வெள்ளிக்கிழமை சுமார் காலை 1-மணிக்கு தமது 58-வது வயதில் தன் மனைவியையும் ஐந்து பிள்ளைகளையும் பரிதவிக்கவிட்டு பரலோகப் பிராப்தியாயினர். இதைக் கண்ணுறும் நண்பர்கள் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக 1-பர. பிரி. திரி. வேண்டிக்கொள்ள பிராத்திக்கின்றனன்.

இப்படிக்கு
தந்தையை யிழந்த மைந்தன்
A. J. சதானந்தம் பிள்ளை.

தூத்துக்குடி.

எனது நேச தம்பி சிங்கராயன் பெர்னாந்தீஸ் கொஞ்சக்காலம் அசௌக்கியமாயிருந்து கடைசியாக சகல தேவத்திரவிய அனுமானங்களையும் பெற்று இன்று காலை 1-மணிக்கு பரலோக பிராப்தியான பரிதாபமான துக்கத்தை இத்தால் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவிப்பதுடன் அந்த ஆத்துமத்தின் நித்திய இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளவுங் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தூத்துக்குடி
27, மணல் தெரு
13—5—18
} சூசை பேர்னாந்தீஸ்.

R. I. P.

அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மவுன்ட்ரோட், "நேப்பியர்" சிங்காரத்தோட்டத்தருகாமையில் அர்ச். அந்தோனியார் பேரால்..அவருடைய பக்தர்களின் உதவியைக்கொண்டு நாம் கட்டிவந்த ஷை கோவில் ஒருவாறு முடிவாகி, 1916ஹூ டிசம்பர்மீ 23உ மிகவும் சங்கைக்குரிய எமது அதிமேற்றிராணியாரால் மந்திரிக்கப்பெற்று அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று அவரால் அவ்வாலயத்தில் பெரிய பாடற்பூசை செய்யப்பட்டதென்று மிக்கச் சந்தோஷத்துடனும் வந்தனத்துடனும் இதனால் ஷை உபகாரிகள் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இத்துடன் கோவில் வேலை முடிந்து போய்விட்டதென்று நினையாதீர்கள். தெய்வ பணிவிடைக்கேற்ற பூசைப் பாத்திரங்கள், பூசை வஸ்திரங்கள் முதலிய சாமான்கள் தேவையாயிருக்கின்றன. மேலும் பங்கு ஸ்வாமியார் வசிக்க ஒரு சிறு விடுதியும் அவசியம். இவைகளுக்காக மதிப்பிடப்பட்டிருக்கிற தொகை குறைந்தது 2,000 நூக்கு மேலாகும்—ஆகவே, நீங்கள் இதுகாறும் எமக்குக் கைகொடுத்து உதவினதுபோல இப்பவும் உதவி செய்வீர்களென்று நம்பியிருக்கும்,

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள சங். அருளப்பநாத சுவாமிகள்.

இதுவரையிலும் வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	4,633	13	6
Mr. A. டேவிட்	5	0	0
,, வளர்நாதன்	1	0	0
ஓர் நன்கொடை	5	0	0
ஆக மொத்தம்,	4.644	13	6

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு சத்திரம்.

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு ஒரு சத்திரம் தேவையென்பது நெடுநாளாய் அனுபவித்துவந்த குறை. வெளியூரிலிருந்து வரும் கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமின்றி தவிக்கவேண்டியதாயிருப்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயம்.

இக்குறையை நிவர்த்திக்க மயிலாப்பூர் மேற்றிராணியாருடைய அநுமதியின்பேரில் சங். எல். எக்ஸ். பெர்நாந்திஸ் சுவாமிகளின் தலைமை வகித்து ஒரு கமிட்டி சென்னையி லேற்பட்டிருக்கிறது. இக் கமிட்டியாரால் சிறுகச் சிறுக இதுவரையில் சேகரித்திருப்பது ரூ. 1.140—15—0 இத்தொகையைக் கொண்டும், கமிட்டி மெம்பரில் ஒருவருடைய கடன் கொண்டும் ரூ. 1,400 க்கு ஒரு சிறு இடம் வாங்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரு தக்க சிறு வீடாவது கட்டிமுடிக்க குறைந்தது ரூ. 5,000 ஆவது வேண்டும்.

இக்கருத்துக்காக கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்கள் தங்களால் கூடிய தொகையை அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பி இப்பொதுநலக்காரியத்துக்கு உதவி புரிவார்களென கோரப்படுகிறது.

	ரூ.	அ.	பை.
ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	1,388	15	0
பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகள் (மேஜீத்துக்கு)	30	0	0
ஆக மொத்தம்	1,418	15	0

Rev. Fr. L. X. FERNANDEZ,
North Georgetown,
Madras, E.

லீலியும் ரோசாவும்.

ஆதி திருச்சபையில் அஞ்ஞான மார்க்கத்திலிருந்து மனம் திரும்பின இரு செல்வமாது சிரோன்மணிகளைப்பற்றிய இச் சரிதையானது 417-பக்கங்கள் அடங்கியது. இஃது திருச்சினாப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலாசாலையில் பேர்பெற்று காலஞ்சென்ற பிரான்ஸிஸ் பில்லியர்டு சுவாமியார் அவர்களுடைய ஞாபகத்துக்காக, அவர்களுடைய கிறீஸ்துவ மாணுக்கர்களில் ஒருவரால் எழுதப்பட்டது. புஸ்தகம் வேண்டுவோர் மதுரை சென்ட் மேரிஸ் ஸ்கூல் உபாத்தியாயர் மகா-ா-ா-ஸ்ரீ சூசை கோவிந்தராவுக்காவது அல்லது நல்லாயன் அச்சியந்திரச்சாலை மானேஜருக்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால்கூலி அன்னியில் இந்தியாவில் எந்த இடத்திற்கும் விலை 12 அணு; இதர நாடுகளுக்கு விலை ரூபாய் 1.

சூசை கோவிந்தராவ், ஏஜண்டு,
மதுரை.

The Zemindar Cap

THE HEAD DRESS FOR THE GENTRY

ATTRACTIVE
UP-TO-DATE
DURABLE
CHEAP

IN ALL
SIZES,
COLOURS;
BROWN,
BLACK &
BLUE BLACK

THE ZEMINDAR CAP is specially adapted for Indian requirments, and bids fair to become the popular Head-Gear of Indian gentlemen. **Prices Rs. 4-8 & 3-12.** *Special rates for Large Quantities.*

Apply to :—**HAIL & Co.,**
MANUFACTURERS OF ZEMINDAR CAPS,
BOOTS, SHOES, SANDLES, & SHIRTS,
Royapettah, MADRAS.

Suppliers of every useful article, whole sale & retail, at Moderate rates. Price list on applications.

குறைந்த விலையின் தவணை யின்னுஞ் சில நாட்கள் மட்டுந்தா
னிருக்கிறது. பிறகு சொந்த விலையாகிய 5-ரூபா யாகிவிடும்
விலை அதிகப்படாமுன்னே ஆர்டரனுப்புங்கள்.

திருக்குடும்பந் துணை.

தேம்பாவணி விருத்தியுரை.

வெகு நயம்! வெகு நயம்!
குறைந்த விலை! குறைந்த விலை!

இப்புத்தக மிருக்கும் ஒவ்வொரு வீட்டிலேயும் தேவாசீர் பெருகுமென்பது ஆன்றோர் வாக்கு. திருக்குடும்ப சரித்திரமென்னுந் தேம்பாவணி விருத்தியுரை முன் 5-ரூபாய்க்கு விற்கப்பட்டு இப்போது குறைந்த விலையாகிய 3-ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இது அதிக சங்கைதங்கிய வரப்பிரசாத ஆர்சபிஷப்பெனும் அதிமேற்றிராணியாரான சூசை கால்கன் ஆண்டவரவர்கள் உத்தரவினாலும் அநேக குருப்பிரசாதிகளின் அபிப்பிராயத்தாலும் நேர்த்தியான காகிதத்தில் ராயல் சயிசில் அச்சிட்ட பெரிய புத்தகம். இன்னுங் கொஞ்சந்தா னிருக்கிறது. விலை ரூபா 3. பிறகு விலை அதிகமாகும்.

அர்ச். அந்தோனியார் நாடகம் ரூ 1 4 0. அர்ச். சிவியப்பர் விலாசம் ரூ 1 4 0. அர்ச். ஜெனிக்கிளாஸ் விலாசம் ரூ 1 8 0. அர்ச். பார்பாரம்மாள் மாலை ரூ 1 0 0. நூதன யோசேப்பு சபா ரூ 0 12 0. கெட்டகுமாரன் கதை யென்னும் ஊதாரிப்பிள்ளை விலாசம் ரூ 0 14 0. சைவமகத்துவ திமிரபானு விவிலிய விரோதத்திக்காரமெனும் பெர்போன தர்க்கத்தகம் டை அதிமேற்றிராணியார் அநுமதிபெற்றது ரூ 2 0 0.

எ. எப். சைமன்,
கமிஷன் எஜென்ட்; மகா விகடதூதன் ஆபீஸ்;
ஜார்ஜ்டவுன்; மதுராஸ்.

LAGHIAM DEPOT.

No. 44, Nomboolyar Street, Sowcarpet, Madras.

பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்க பலத்தைத் தருவதெது?

அமிர்த சஞ்சீவி லேகியமும்,

அயக்காந்த செந்தூரமுமே.

இதை அவசியம் முழுதும் வாசியுங்கள்.

(முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும்,
தேகபலத்தை தரும் ஔழதம் வேறொன்றுமில்லை.)

விளம்பரம்.

இதைக் கண்ணுறும் கனவான்களே!

இந்த லேகிய செந்தூரமானது சாமான்யமானதன்று; அபாரமான சத்துவத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளது. உறுதியாய் இதை நம்பி ஒரே தடவை வாங்கியுண்ண எமது மருந்தின் விசேடகுணம் நன்கு விளங்கும்.

இந்த லேகிய செந்தூரத்தால் நிவர்த்தியாகும் முக்கிய குணங்களாவன.

துர்நடத்தையா லுண்டாகும் 20-வகை மேகரோகங்கள், சூலை ரோகம், குன்ம ரோகம், பித்த பாண்டு, கைகால் முடக்கு, ஒடு வாய்வு, பித்த எப்பம், நெஞ்சு, தொண்டை எரிச்சல், வயிறு உப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாது ஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர் வடிதல், சோம்பல், நித்திரை யில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும்தந்தி மேகம் முதலியவைகளை ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீக்கிவிடும். பயங்கரமான மேக வெட்டை சம்பந்தமான வியாதிகளை பத்தே வேளையில் முழுதும் குணமாக்கி சப்த நரம்புகளை மிக முறுக்கேற்றி அபரிமிதமான ரத்த விர்த்தியைப் பெருக்கி சக்தியைத் தருவதில் இதற்கு மிஞ்சின லேகிய பஸ்பம் வேறொன்றில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் இளைத்த தேகத்தை புஷ்டியாக்கி தேக தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதியைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரமே முதன்மையான தென்பதை எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க இந்த லேகிய செந்தூரமானது மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்தியாக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கியுண்ண இதன் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம் மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரத்தை எவ்வளவு சிறப்பித்து கூறியபோதிலும் தகும். தவிர இதை நோய் உள்ளவரேதான் சாப்பிடவேணும் என்ற அவசியமில்லை, யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் லேகிய செந்தூரத்தை யாதும் பத்தியமின்றி சாப்பிட சாவளவும் துற்பலமே ஏற்படாது, இது சத்தியம். 'தருவித்து எண்ணிக்கையாக சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் தராவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் வாங்கிய பணம் வாப்ஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய் உடையோர் 48-நாள் சாப்பிடுவார்களேயானால் முழுதும் குணமாகிவிடும். அப்படி குணம் தராவிடில் யாங்கள் உத்திரவாதியாவோம். அதாவது யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரத்தை எவ்வளவோ சிரத்தையுடன் நல்ல பெயர் வாய்க்கும்பொருட்டு கொஞ்சமேனும் திரேக சிரமம் பாராமல் எம்மால் கூடிய வரையில் கஷ்டப்பட்டு முடித்து பரோபகாரார்த்தமாக ஜனங்கள் வாங்கியுண்டு திரேகத்தை பொன்மய மாக்கிக்கொண்டு நீடூழிகாலம் வாழ்வார் என்னும் அபிப்பிராயத்தால் உண்மையில் இதை வெளியிட்டோம். இந்த லேகிய செந்தூரமானது (போலிப்பண்டித போய்யர்களாகிய வைத்திய வாசனையே யில்லாத சில தாந்தோன்றி தப்பிரான்கள் பணத்தை கவரும்பொருட்டு வெளிப்படுத்தும் விளம்பரத்தில் இதுவும் ஒன்று என எண்ணவேண்டாம்.) இவ் வருமை வாய்ந்த லேகிய செந்தூரத்திற்கு பொன் மெடல், வெள்ளி மெடல் பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்கள் பெற்றிருக்கிறோம். எமது லேகிய செந்தூரத்தை உண்டவர்

உடனே எமது கம்பெனிக்கு யாம் கோராதபடியே ஏஜண்டாய் நாடுவோர்கள். இது உண்மை.
அப்படி ஏஜண்டாய் சேருவோருக்கு மருந்துகட்கு மட்டும் 100-க்கு 25 கமிஷன் தரப்படும். அப்படி
ஏற்பட்டபோதிலும் மாதத்திற் கொருவிசை கணக்கு பைசல் செய்யப்படும். எமது லேகிய செந்
தூரமானது யாம் சொன்ன வரையில் குணத்தைக் கொடுக்கிறது என்றதைப்பற்றி எத்தனைதரம்
பிரமாணம் செய்யச் சொன்னபோதிலும் காத்துக்கொண்டிருக்கிறோம். இது உண்மை. ஒரேதரம்
தருவித்து பாரும், எமது உண்மை நன்கு விளங்கும்

வாதாதிக்க தோஷத்தினாலாவது. துரப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலா
வது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, ஸ்திரீ வியாதியினாலாவது, மற்றெந்தக் காரணத்தி
லாயினும் பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக ஷை பண்டிதருடைய லேகிய செந்தூரத்தை புசிப்
பார்களானால் தேகாரோக்கியம், வலிவு, அழகு முதலியது பெற்று ஆநந்தத்தில் மூழ்கும்படிச்
செய்யுமென்பதில் தடையே யில்லை.

வெளியூர் கனவான்கள் இந்த லேகியத்தில் முழுநம்பிக்கைவைத்து ஒரே வொருதரம் பரீ
க்ஷிப்பார்களானால், அவர்கள் அடையும் ஆநந்தத்திற்கு அளவேயில்லை. லேகிய செந்தூரத்தினா லுண்
டாகும் அற்புத குணத்தைத் தெரிந்துகொண்டபின் நமது லேகியத்துக்குச் சிபார்சு செய்யும்படி
உங்களை நாம் கேட்டுக்கொள்ளாமலே உங்கள் பந்துக்கள், நேசர் முதலியவர்க்கு நீங்களே ஷை
பண்டிதருடைய லேகிய பஸ்பத்தின் சிறந்த குணத்தையும், நீங்கள் அதனாலடைந்த ஆனந்தத்தை
யும் எடுத்துக்கூறி சிபாரிசு செய்வீர்கள் என்பது நிச்சயம்.

இந்த லேகிய செந்தூரத்திற்கு பத்தியமே கிடையாது. சகலமும் நீக்குதலின்றி மருந்து
சாப்பிடும் காலத்தில் வயிற்றிற்கு துரோகம் செய்யாமல் சாப்பிடவேண்டியது. ஏனென்றால் பசி
அதிகமாய் எடுக்கும். பச்சைபயறு கொழம்பு, தயிர், பால், கறி, மார்க்கண்ட சூப்பு, நெய் இவை
அதிகமாய் தேகத்தை தணிக்கக்கூடிய விதமாய் தாமதம் செய்யாமல் சாப்பிட்டு வரவேண்டியது.
பசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள்
எருமைப்பால், பசும்பால், ஆட்டுப்பால் எதுவாயிருந்தாலும் சந்தேகமின்றி சாப்பிட்டு வரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரத்தை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக
48-நாள் சாப்பிடுவார்களேயானால் அது தேகத்தில் ஊற ஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட
பனிபோல் நீங்கி தேகமானது வலுத்து புதியரத்தம் பரவி தன் வாழ்நாள் பரியந்தம் தேகமானது
இளைக்காமல் முற்றிலும் அக்களிப்போடு ஆஜானுபாஹுவாய் விளங்குவார். இதை புருஷன்
பெண்சாதி இருவர் ஏககாலத்தில் ஒற்றுமையாய் சாப்பிட்டு வந்தார்களேயானால் உதிக்கு மக்கள்
யாதொரு நோய் இல்லாதபடி ரொம்பவும் தேஜசாய் தோன்றுவார்கள். இதைப்பற்றிப் பிரமாண
மாய் சொல்லுவோம். நல்ல வாலிபதசையைக் கட்டாயம் அடைவார்கள். இது உண்மை. இதைப்
பற்றி இன்னும் எழுத முடியாது.

24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ 1—12—0.
போஸ்டேஜ் அணா 4.
ஒரே காலத்தில் 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் இனாம்.

சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்)

பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!

இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்க்கு 100-ரூபாய் பரிசளிக்கப்படும்.



நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா
கையில் இருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில
யூனானித் தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. நாள்பட
வைப்பதால் குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாக்காலி; செய்யான்,
பாம்பு, எலி முதலிய விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் அடியோடு
நீக்கக் கூடியது. எண்ணிறந்தோர் இதனால் சுகமடைந்தது பிரத்தியட்ச
அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவில்லை. இது இரண்டு
வித மருந்துகளடங்கியது. உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்
படும்.

விலை :—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு ரூ 0 8 0
ஷை தபாற்கூலி 0 3 0 டஜன் 1-க்கு ரூ 5 0 0
ஏக காலத்தில் 2-பாக்கெட் வாங்கினால் தபாற்கூலி இனாம்.
வர்த்தகர்களுக்கு 100-க்கு 25 கமிஷன்.

எமது விலாசம் :— **லேகியம் டிபோ,**
நெ. 44, நம்புலையர் வீதி, சௌக்கார்பேட்டை, மதராஸ்.